பொதுசன நூலகம்
நாவாந்துறைப் படிப்பகம்
மாநகர சபை, யாழ்ப்பாணம்.

விலை ரூபா: 15.00


Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: பன்னிரண்டு

Valampurii

சங்கு 10 வள்ளுவர் ஆண்டு 2040 தை 29 புதன்கிழமை (11.02.2009) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 054





# வன்னியில் தவித்த நோயாளர்கள் கப்பல் மூலம் வெளியேற்றம்

## சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் வழித்துணை

(கொழும்பு)

முல்லைத்தீவில் மோதலில் இடையில் அகப்பட்ட நோயாளிகள் மற்றும் காயப்பட்டவர்களை அங்கிருந்து பாதுகாப்பாக வெளியேற்றுவதற்காக சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் கப்பல் ஒன்றை ஏற்பாடு செய்துள்ளது. அந்த வகையில் முதல் கட்டமாக சுமார் 250 பேர்வரை சிகிச்சைக்காக நேற்று புதுமாத்தளனில் இருந்து இந்த கப்பலில் திருகோணமலைக்கு அனுப்பட்டுள்ளனர். (12ஆம் பக்கம் பார்க்க)



நேற்று முன்தினம் இடம்பெற்ற எறிகணைத் தாக்குதலில் பலியான கணவனின் சடலத்தின் முன் கதறியழும் மனைவி

## பயணிகள் கப்பல் முல்லைத்தீவில்

(திருகோணமலை)

பயணிகள் கப்பல் திருகோணமலையிலிருந்து நாளை புறப்படக் கூடும் என திருகோணமலை அரசாங்க அதிபர் தெரிவித்தார்.

காங்கேசன்துறைக்கும் திருகோணமலைக்கும் இடையில் சேவையில் ஈடுபடும் கப்பல் வன்னியில் தாக்குதல்களால் காயமடைந்த மக்களை முல்லைத்தீவில் வைத்து ஏற்றும் பணியில் ஈடுபட்டுள்ளதால் காங்கேசன்துறை–திருகோணமலை பயணிகள் சேவை (12ஆம் பக்கம் பார்க்க)

## வன்னியில் அகோர ஷெல் வீச்சு 48 மணி நேரத்தில் 58 பேர் பலி

### மேலும் 164 பேர் படுகாயம்

(முல்லைத்தீவு)

வன்னியில் நேற்றும் நேற்று முன்தினமும் 48 மணிநேரத்துக்குள் மேற்கொள்ளப்பட்ட எறிகணை மற்றும் விமானத் தாக்குதல்களில் 58 பொதுமக்கள் உயிரிழந்துள்ளனர். 164 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

வன்னியில் பொதுமக்களை இலக்கு வைத்து இரவு நேரத்தில் படையினர் நடத்திய தாக்குதலில் நேற்று பொதுமக்கள் 22 பேர் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். 87 பேர் காயமடைந்துள்ளனர்.

போதிய மருத்துவ வசதிகள் இன்றி காயமடைந்தவர்கள் பெரும் அவதிப்படுவதாக செய்திகள் தெரிவித்தன.

முல்லைத்தீவிலுள்ள தேவிபுரம் பகுதி மீது நேற்று செவ்வாய்க்கிழமை அதிகாலை 2.15 மணி தொடக்கம் 3.15 மணி வரையான ஒரு மணி நேர கடும் இருட்டு நேரத்தில் படையினர் (12ஆம் பக்கம் பார்க்க)

## சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தை வெளியேறக் கோரி ஆர்ப்பாட்டம்

### பிரி.- அமெரிக்காவுக்கும் எதிர்ப்பு

(கொழும்பு)

பிரித்தானியா, அமெரிக்கா ஆகிய நாடுகள் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு ஆதரவு வழங்குவதாகவும் படைகளின் போர் வெற்றிகளை திசை திருப்ப முற்படுகின்றனர் என்று கண்டித்தும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் நாட்டைவிட்டு வெளியேற வேண்டும் எனக் கோரியும் கொழும்பில் நேற்று ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

அதேவேளை, படையினருக்கு உதவி புரிவதாகக் கூறி இந்தியா,சீனா,ரஷ்யா ஆகிய நாடுகளுக்கு ஆர்ப்பாட்டக்காரர்கள் நன்றியும் பாராட்டும் தெரிவித்தனர்.

இந்தியா,சீனா,ரஷ்யா போன்ற நாடுகளுக்கு நன்றி தெரிவிக்கும் பதாகைகளையும் ஆர்ப்பாட்டக் (12ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கை நிலைமை குறித்து நோர்டிக் நாடுகள் கவலை

(ஒஸ்லோ)

இலங்கையின் மனிதாபிமான நிலை குறித்து இணைத்தலைமை நாடுகளின் வெளிநாட்டு அமைச்சர்கள் கவலையை வெளியிட்டுள்ளனர்.

நோர்டிக் நாடுகளின் வெளிநாட்டமைச்சர்களின் கூட்டம் நேற்று முன்தினம் நடைபெற்றதன் பின்னர் ஐந்து நாடுகளின் வெளிநாட்டமைச்சர்களும் இணைந்து இலங்கையின் இன்றைய நிலைமை குறித்து வெளியிட்ட அறிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

இலங்கையின் நிலைமை குறித்து இணைத்தலைமை நாடுகள் கடந்த பெப்ரவரி 3 ஆம் திகதி வெளியிட்டுள்ள அறிக்கையை வெளி நாட்டமைச்சர்கள் வரவேற்றுள்ளனர். மனித இழ ப்பு ஏற்றுக்கொள்ள முடியாத அளவுக்கு அதிகரித்திருப்பதும் இரண் டரை இலட்சம் வரையிலான மக்கள் போர் பகுதிக்குள் (12ஆம் பக்கம் பார்க்க)

## இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதி நோக்கிச் சென்ற பொதுமக்கள் மீது துப்பாக்கிச் சூடு 19 பேர் பலி; 75 பேர் படுகாயம்

### புலிகள் மீது இராணுவம் குற்றச்சாட்டு

இராணுவத்திற்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே கடும் மோதல்கள் நடைபெற்றுக்கொண்டிருக்கும் பிரதேசத்தில் இருந்து வெளியேறி இராணுவக்கட்டுப்பாட்டு பிரதேசத்தை நோக்கி வந்த பொதுமக்கள் மீது முல்லைத்தீவு உடையார்கட்டுப் பகுதியில் நடத்திய துப்பாக்கிச்சூட்டில் 19 பொது மக்கள் கொல்லப்பட்டுள்ளதுடன் 75 பேர் காயமடைந்துள்ளனர்.

இத் தாக்குதல் விடுதலைப் புலிகளினாலேயே மேற்கொள்ளப்பட்டுள்ளதாக இராணுவப் பேச்சாளர் (12ஆம் பக்கம் பார்க்க)

## ஐ.நாவின் சுயாதீன பிரதிநிதிகள் அதிருப்தி

(கொழும்பு)

இலங்கையில் இடம்பெற்றுவரும் மோதல்களின் காரணமாக ஏற்பட்டுள்ள மனிதப் பேரவலம் குறித்து ஐக்கிய நாடுகளின் சுயாதீனப் பிரதிநிதிகள் குழு அதிருப்தி வெளியிட்டுள்ளது.

குறிப்பாக குற்றச் செயல்களில் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் சாட்சிகளுக்கு உரிய பாதுகாப்பு வழங்கப்படுவதில்லை எனச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

நாட்டில் சட்டம் ஒழுங்கு முழுமையாக நடைமுறைப்படுத்தப்படாமையினால் குற்றவாளிகள் (12ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# பாடசாலை அதிபர்களுக்கான 'ஊடகக் கல்வி' கருத்தரங்கு இன்று

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக ஊடக வளங்கள் பயிற்சி நிலையத்தில் 'ஊடகக் கல்வி அறிவும் பாடசாலை மாணவர்களும்' என்ற பொருளில் இன்று புதன்கிழமை காலை 9.30 மணிக்குப் பாடசாலை அதிபர்களுக்கான கருத்தரங்கு நடைபெறவுள்ளது.

யாழ். பல்கலைக்கழக ஊடக வளங்கள் பயிற்சி நிலையத்தின் பணிப்பாளர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் என். சண்முகலிங்கன் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார்.

மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் வி.ரி.செல்வரத்தினம், யாழ். வலயக் கல்வி பணிப்பாளர் திருமதி அ. வேதநாயகம், வலிகாம வலயக் கல்விப் பணிப்பாளர் ப. விக்னேஸ்வரன், வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வீ. செல்வராஜா, தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிரேமகாந்தன், தீவக வலயக் கல்விப் பணிப்பாளர் பி.வி. இராதாகிருஸ்ணன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்துகொள்வர்.

இந்த நிகழ்வில் யாழ்.பல்கலைக்கழக கலைப் பீடாதிபதி பேராசிரியர் சோ.கிருஸ்ணராஜா தொடக்கவுரையை ஆற்றவுள்ளார்.

கருத்துரைகளை யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் என்.சண்முகலிங்கன், ஊடகவியலாளர் க.வேல்தஞ்சன், யாழ். பல்கலைக்கழக ஊடக வளங்கள் பயிற்சி நிலையத்தின் பணிப்பாளர் பேராசிரியர் பொ. பாலசுந்த்ரம்பிள்ளை ஆகியோர் நிகழ்த்துவர். இந்தக் கருத்தரங்கு கடந்த மாதம் 28 ஆம் திகதி நடைபெறவிருந்து பிற்போடப் பட்டமை குறிப்பிடத்தக்கது. (ந)

# பாதிக்கப்பட்டோருக்கு அரசினால் நஷ்டஈடு

முல்லைத்தீவு, விசுவமடு பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற தற்கொலைக் குண்டுத் தாக்குதலில் கொல்லப்பட்டோருக்கும் காயமடைந் தோருக்கும் அரசாங்கம் நஷ்டஈடு வழங்கவுள்ளதாக மீள்குடியேற்ற மற்றும் அனர்த்த நிவாரண அமைச்சர் ரிஷாத் பதியுதீன் தெரிவித்தார்.

இந்த தற்கொலைக் குண்டுத் தாக்குதலில் பலியான குடும்பஸ்தர் ஒருவருக்கு தலா ஒரு இலட்சம் ரூபா வீதமும் குடும்பஸ்தர் அல்லாத ஒருவருக்கு தலா 50ஆயிரம் ரூபா வீதமும் 18 வயதுக்குக் குறைந்தோருக்கு தலா 25 ஆயிரம் ரூபா வீதமும் நஷ்ட ஈட்டுத் தொகை வழங்கப்படவுள்ளது.

இந்தச் சம்பவத்தில் பலியானோரின் இறுதிக் கிரியைகளுக்காக ஒருவருக்கு தலா 10ஆயிரம் ரூபா வீதம் வழங்கப்படவுள்ளது.

இதேவேளை இந்த தற்கொலைக் குண்டுத் தாக்குதல் காரணமாக காயமடைந்தோருக்கு முதற் கட்டமாக தலா 10ஆயிரம் ரூபா வீதம் வழங்கப்படவுள்ளது. காயமடைந்தோரின் வைத்திய அறிக்கையின்படி இத் தொகை மேலும் அதிகரிக்கப்படும் என்றும் அமைச்சர் மேலும் குறிப்பிட்டார். (ச-5)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

## அமரர் கணபதிப்பிள்ளை தம்பிராசா



| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 18.05.1935 | 14.01.2009 |

ஐயா என்று நாங்கள் அழைக்க அருகில்
இன்று நீங்கள் இல்லையே.
இதயம் குமுறும் 31 ஆம் நாளில் ஏக்கத்துடன்
நாம் இறைஞ்சுகின்றோம்.
அன்று போல் இன்றும் நீங்கள் நல்வழி
காட்டுவீர்கள் என்ற நம்பிக்கை உண்டு.
திரும்பும் இடம் எல்லாம் உங்கள்
அன்பு முகம் தெரியுது ஐயா
திரும்பவும் ஒரு பிறப்புண்டேல் எம்மிடம்
வந்திடுங்கோ ஐயா.

கடந்த 14.01.2009 புதன்கிழமை இறைபதம் அடைந்த எமது குடும்ப விளக்கின் வீட்டுக் கிருத்திய நிகழ்வு (13.02.2009) வெள்ளிக்கிழமை மு.ப. 7.00 மணியளவில் இன்பர்சிட்டி மடத்தில் நடைபெறவுள்ளது. அத்தருணம் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மா சாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து இடம் பெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

குறிப்பு:-
*அழைப்புக்கிடைக்காதவர்கள் இவ் அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.*

இன்பர்சிட்டி,
பருத்தித்துறை.

இங்ஙனம்
- குடும்பத்தினர்

(2244)

# யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை

## இராமநாதன் நுண்கலைக் கழகம்

பல்கலைக்கழக அனுமதி – 2008/2009

## தகுதிகாண் பரீட்சை

### நுண்கலைமாணி – இசை, நடனம், சித்திரமும் வடிவமைப்பும்

மேற்படி நான்குவருட பட்டப்படிப்பு கற்கை நெறிகளுக்கு அனுமதிபெற விரும்பும் தகுதியான விண்ணப்பதாரிகளிடமிருந்து 01.03.2009 ஆம் திகதிவரை விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

**அனுமதிக்கான பொது நிபந்தனைகள்**

**அனுமதிக்கான தகைமைகள்**

சங்கீதம், நடனம், சித்திரமும் வடிவமைப்பும் கற்கைநெறிகளை தெரிவுசெய்வதற்கு விரும்பும் விண்ணப்பதாரிகள் 2008ஆம் ஆண்டு நடைபெற்ற க.பொ.த.(உ/த) பரீட்சையில் சித்தியடைந்திருப்பதுடன் தெரிவுசெய்யவிரும்பும் பட்ட பாடநெறிக்குரிய பாடத்தில் அதாவது சங்கீதம்-கர்நாடகம் அல்லது நடனம்-பரதம் அல்லது சித்திரக் கலையில் ஆகக்குறைந்தது திறமைச்சித்தியும் (C) மற்றைய இரண்டு பாடங்களிலும் ஆகக்குறைந்தது சாதாரணதர சித்தியும் ( S) பெற்றிருத்தல்வேண்டும்.

**தகுதிகாண் பரீட்சை**

மேற்குறித்த கற்கைநெறி அனுமதிக்கான விண்ணப்பதாரிகள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தால் நடத்தப்படும் ஆற்றுகைப் பரீட்சை, நேர்முகப் பரீட்சை உள்ளடங்கிய தகுதிகாண் பரீட்சைக்கு (Aptitude Test) யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்திலோ அல்லது வவுனியா வளாகத்திலோ தோற்றுதல் வேண்டும்.

**விண்ணப்பங்களைச் சமர்ப்பித்தல்**

விண்ணப்பதாரிகள் பக்கத்தில் கொடுக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்தை A4 தாளில் தயாரித்தோ அல்லது யாழ்ப்பாணப் பல்கலைக்கழக அனுமதிகள் கிளையில் பெற்றோ அல்லது www.jfn.ac.lk என்ற யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இணைய தளத்திலிருந்து பிரதி செய்தோ தகுதிகாண் பரீட்சைக்கு விண்ணப்பிக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

மேற்படி தகுதிகாண் பரீட்சைக்கான விண்ணப்பத்துடன் ரூபா. 150 ஐ ஏதாவதொரு மக்கள் வங்கிக் கிளையில் யாழ்ப்பாணப் பல்கலைகழக மக்கள் வங்கிக் கிளைக் கணக்கு இல.1-62-090501-3 இல் செலுத்தி பெற்ற பற்றுச்சீட்டுடன் அதிபர் அல்லது சமாதான நீதவானால் உறுதிப்படுத்தப்பட்ட க.பொ.த. உயர்தர பெறுபேற்றுப் பத்திரத்தினது போட்டோ பிரதியும் அனுப்பப்படல் வேண்டும். பரீட்சைப் பெறுபேற்றில் அல்லது பெயரில் மாற்றங்கள் ஏதும் இருப்பின் அதற்குரிய சத்தியக்கடதாசி சமர்ப்பிக்கப்பட்டு உறுதிசெய்யப்படவேண்டும்.

விண்ணப்பதாரிகள் சுய விலாசம் இடப்பட்ட முத்திரை ஒட்டப்பட்ட 23 x 10 ச.மீ. அளவுள்ள கடித உறையை இணைத்து அனுப்புதல் வேண்டும்.

பிரவேச அனுமதித் தகைமையைப் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரிகளுக்கு ஆற்றுகை / நேர்முகப் பரீட்சைக்குரிய அனுமதி அட்டை அனுப்பிவைக்கப்படும்.

பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பங்கள் யாவும் 01.03.2009ஆம் திகதிக்கு முன்னதாக உதவிப் பதிவாளர், அனுமதிகள் கிளை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் கற்கைநெறியைக் குறிப்பிட்டு பதிவுத்தபால் மூலம் அல்லது நேரில் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

அனுமதிக்குரிய ஆகக்குறைந்த தகைமையைக் கொண்டிராததும், பணம் செலுத்திய பற்றுச்சீட்டு சமர்ப்பிக்கப்படாததும் பெறுபேற்று பத்திரங்களின் உறுதிசெய்யப்பட்ட போட்டோ பிரதிகள் இணைக்கப்படாததும், விண்ணப்ப முடிவுத்திகதிக்குள் கிடைக்கப்பெறாததுமான விண்ணப்பங்கள் யாவும் நிராகரிக்கப்படும். மேலதிக விபரங்களுக்கு தொடர்பு கொள்ளவேண்டிய தொலைபேசி எண் 021 222 6714

பதிவாளர்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

(C-2124)

10.02.2009

# யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை

## இராமநாதன் நுண்கலைக் கழகம்

பல்கலைக்கழக அனுமதி – 2008/2009

நுண்கலைமாணி – இசை, நடனம், கலையும் வடிவமைப்பும்

## தகுதிகாண் பரீட்சைக்கான விண்ணப்பம்

1. விண்ணப்பதாரியின் முழுப்பெயர் : (தமிழிலும் ஆங்கிலத்திலும்)

முதல் எழுத்து குறிக்கும் பெயர் :

தேசிய அடையாள அட்டை இல.:

நிரந்தர முகவரி ஆங்கிலத்தில் :

தொலைபேசி இல.:

2. க.பொ.த (உ.த) பரீட்சை பெறுபேறு – 2008 :

சுட்டிலக்கம் : Z புள்ளி : பொதுச் சாதாரண பரீட்சை புள்ளி:

| பாடம் | தரம் | மொழி மூலம் | மாவட்டம் |
|---|---|---|---|
| 1. | | | |
| 2. | | | |
| 3. | | | |

3. பெற்றோர்/பாதுகாவலர் பெயர் :
முகவரி (ஆங்கிலத்தில்) :

4. விண்ணப்பிக்கும் பாடநெறி: இசை நடனம் கலையும் வடிவமைப்பும்
(தெரிவிற்கு ✓ இடுக)

5. தெரிவு செய்யும் பரீட்சை நிலையம் : யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் வவுனியா வளாகம்

6. சமர்ப்பிக்கப்படும் ஆவணங்கள் :
1. பணம் செலுத்திய பற்றுச்சீட்டு
2. உறுதிப்படுத்திய 2008 க.பொ.த. (உ.த) பரீட்சை பெறுபேறு சான்றிதழ் (Z புள்ளி / மாவட்டம் உள்ளடங்கலாக)
3. பெயர் மாற்றம் செய்யின் அதனை உறுதிப்படுத்தக்கூடிய ஆவணம் சான்றிதழ்

என்னால் தரப்பட்ட மேற்படி விபரங்கள் யாவும் சரியென உறுதிப்படுத்துகின்றேன்.

...................... திகதி

........................................... விண்ணப்பதாரியின் கையொப்பம்

என் முன்னிலையில் கையொப்பமிட்டார் என்பதை உறுதிப்படுத்துகின்றேன்.

திகதி பதவி முத்திரை பாடசாலை அதிபர்/சமாதான நீதவான் கையொப்பம்

# இன்று ஒரு தகவல்

## ஒரு குருவும் சீடனும்

நாம் குருமார்களைப் பற்றியும் சீடர்களைப் பற்றியும் நிறையக் கேள்விப்பட்டிருக்கிறோம்.

சீடர்களில் இரண்டு வகை உண்டு. குருமார்கள் சீடர்களைத் தேர்ந்தெடுப்பது ஒருவகை. சீடர்களே குருமார்களைத் தேர்ந்தெடுப்பது இன்னொருவகை.

இதில் குருமார்கள் சீடர்களைத் தேர்ந்தெடுப்பது தான் உயர்வு. நான் உன்னைத் தேர்ந்தெடுத்திருக்கிறேன் என்றெல்லாம் அவர் சொல்லிக் கொண்டிருக்க மாட்டார்.

தேர்ந்தெடுத்தது மாதிரி ஒரு பிரம்மையை உண்டு பண்ணுவார் அவ்வளவுதான். அவர் தன்னைத் தேர்ந்தெடுத்திருக்கிறார் என்று தெரிந்தால் இவனுக்கு அகங்காரம் அதிகமாகும்.

ஒரு ஞானி இருந்தார். அவரிடம் ஒரு சீடன் இருந்தான். அவன் இரண்டாவது வகையைச் சேர்ந்தவன். அடிக்கடி அதைச் சொல்லிக் கொடுங்க... இதைச் சொல்லிக் கொடுங்க என்று தொந்தரவு செய்து கொண்டே இருப்பான்.

அவர் பார்த்தார். ஒரு நாள் அவனைக் கூப்பிட்டு ஒரு கல்லைக் கொடுத்தார். இதை காய்கறிச்சந்தைக்கு எடுத்துக் கொண்டு போய் விற்றுவிட்டுவா என்றார். அந்தக் கல் பார்ப்பதற்கு அழகாகவும் பெரிதாகவும் இருந்தது.

குரு சொன்னார்: "இந்தக்கல்லை உண்மையிலேயே விற்று விடாதே விற்பது போல் நடி. பலபேரைப்பார் அவர்களை நன்கு கவனித்துக் கொண்டு வா" என்றார்.

இவன் அந்தக் கல்லை எடுத்துக்கொண்டு காய்கறிச் சந்தைக்குப் போனான். பலபேர் அதைப் பார்த்தார்கள்.

இந்தக்கல்லை காய்கறி விற்பனை செய்வதற்கு எடைக் கல்லாக உபயோகப்படுத்தலாம் என்று நினைத்தார்கள். சிலபேர் குழந்தைகளுக்கு இதை வாங்கிக் கொடுத்து விளையாடச் சொல்லலாம் என்று நினைத்தார்கள்.

இப்படி நினைத்து எல்லோரும் அந்தக்கல்லை குறைந்த விலைக்கே கேட்டார்கள். இவன் திரும்பி வந்தான்.

குருவிடம் சொன்னான்: "இந்தக்கல்லை குறைந்த விலைக்கே கேட்கிறார்கள். அதிகபட்சம் பத்து ரூபாய்க்கு மேல் இதை விற்கமுடியாது" என்றான்.

குரு அவனை தங்கம் விற்கும் இடத்திற்கு அனுப்பினான். அங்கு போய்த் திரும்பி வந்த அவன், "அங்கு இதை ஆயிரம் ரூபாய் வரைக்கும் கேட்கிறார்கள்" என்றான்.

சரி... இப்பொழுது நீ வைரம் விற்கும் கடைக்குப் போ என்று அனுப்பினார். அவன் அங்கு போய்த் திரும்பி வந்து, "இதை 50 ஆயிரம் ரூபாய்க்கு கேட்கிறார்கள். கொடுக்க முடியாது என்றேன். ஒரு இலட்சம் வரைக்கும் கூட வாங்குவதற்கு ஆசைப்பட்டார்கள். நான் சம்மதிக்கவில்லை. அதன்பின் விலையைக் கூட்டிக் கொண்டே போகிறார்கள்" என்றான்.

இப்பொழுது அந்தக் குரு சொன்னார்.

"இதோ பார்... நீ விற்கவில்லை என்றதும் அதனுடைய விலை எப்படி அதிகமாச்சு பார்த்தாயா?"

இது முழுக்க கல்லைவிட உன்னைப் பொறுத்த விஷயமாகி விட்டது. காய்கறிச் சந்தையில் இருக்கும் போது அதனுடைய மதிப்பு பத்து ரூபாய் என்றுதான் நீ நினைத்தாய். இப்பொழுது நீ காய்கறி விற்கும் சந்தையில் தான் இருக்கிறாய்.

அதாவது உன் மனநிலையின் மதிப்பு பத்து ரூபாய் தான். நீ உன்னுடைய மனநிலையை வைரம் விற்கிற கடையைப் போல உயர்த்து. அதன் பின் என்னிடம் வா! என்றார்.

அதனால் ஒரு குருவிடம் சீடனாக இருப்பதற்கும் ஒரு தகுதி வேண்டும்.

அப்பொழுதுதான் அது பயனுள்ளதாக அமையும். இல்லையென்றால் நானும் அந்தக் குருவிடம் ஒரு சீடனாக இருக்கிறேன் என்று சொல்லிக் கொண்டு இருக்கலாம். அவ்வளவுதான்.

நம்ம ஆள் ஒருவன் ஒரு குருவைத் தேடிப் போனான். என்னை உங்கள் சீடனாக ஏற்றுக்கொள்ள வேண்டும் என்றான்.

"என்னிடம் நீ சீடனாக இருப்பதற்கு உனக்கு என்ன தகுதி இருக்கிறது?" என்று கேட்டார்.

"குருவே! ஏற்கனவே நீங்கள் இருந்த ஜெயிலில் தான் நானும் இருந்தேன். இப்பொழுது மாறு வேஷத்தில் வந்திருக்கிறேன். நம்மிருவரையும் இப்பொழுது வேறுயாருக்கும் தெரியாது. இதை விட என்ன தகுதி வேண்டும்" என்றான்.

அதோ கூட்டத்தில் நாம் யாரென்று கூடத் தெரியாமல் பக்த கோடிகளில் ஒருவராக இருக்கிறாரே, அவர் நம்மை அடையாளம் காணாதவரை நமக்கு ஒன்றும் கஷ்டமில்லை, என்றார் குரு.

"யார் அது?" என்றான்.

"அவர்தான் சிறை மேலதிகாரி!" என்றார் அவர்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# 2008/2009 கல்வியாண்டில் பல்கலைக்கழகங்களுக்கு 20,270 மாணவர்கள் அனுமதிக்கப்பட உள்ளனர்

## கல்வி மாணியங்கள் ஆணைக்குழு தீர்மானம்

(கொழும்பு)

இலங்கையிலுள்ள பல்கலைக் கழகங்களின் பட்டப்பயில் நெறிகளுக்கு 2008/2009 கல்வியாண்டில் 20,270 மாணவர்களை அனுமதிப்பதற்கு பல்கலைக்கழகங்கள் ஆணைக்குழு உத்தேசித்திருக்கிறது.

கடந்த 2007/2008 கல்வியாண்டில் 19,650 மாணவர்களை பட்டப்பயில் நெறிகளுக்கு அனுமதிப்பதற்கு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் உத்தேசிக்கப்பட்டிருந்த போதிலும் 20,069 மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டு பல்கலைக்கழகங்களுக்கு அனுமதிக்கப்பட்டதாக ஆணைக்குழுவின் தகவல் குறிப்பொன்றில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

புதிய கல்வியாண்டில் மேலும் 5 புதிய கற்கை நெறிகள் உருவாக்கப்பட்டிருக்கின்றன. பேராதனை பல்கலைக்கழகத்தில் விலக்கியல் விஞ்ஞானமும் மீன்பிடியியலும் ஊவா வெல்லச பல்கலைக்கழகத்தில் நீர்வாழ் வளங்கள் தொழில்நுட்பம், பனை இனத் தாவரம் மற்றும் இறப்பர் பால் தொழில்நுட்பமும் பெறுமதி சேர்ப்பும், விருந்தோம்பல் சுற்றுலா மற்றும் நிகழ்ச்சிகள் முகாமைத்துவமும் வயம்ப பல்கலைக்கழகத்தில் உணவு உற்பத்தியும் தொழில்நுட்ப முகாமைத்துவமும் என இவ்வாறு புதிய பட்டப்பயில் நெறிகள் ஆரம்பிக்கப்படவிருக்கின்றன.

கொழும்பு பல்கலைக்கழகத்தில் 2,050 மாணவர்களும், பேராதனை பல்கலைக்கழகத்தில் 2,525 மாணவர்களும், ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தில் 1,870 மாணவர்களும், மொரட்டுவ பல்கலைக்கழகத்தில் 1,190 மாணவர்களும், யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் 1925 மாணவர்களும், றுகுணு பல்கலைக்கழகத்தில் 1,635 மாணவர்களும், கிழக்குப் பல்கலைக்கழகத்தில் 1,195 மாணவர்களும் தென்கிழக்குப் பல்கலைக் கழகத்தில் 765 மாணவர்களும், ராஜரட்டை பல்கலைக்கழகத்தில் 1,205 மாணவர்களும், சப்ரகமுவ பல்கலைக்கழகத்தில் 825 மாணவர்களும், ஊவா வெல்லச பல்கலைக் கழகத்தில் 560 மாணவர் களும், வயம்ப பல்கலைக் கழகத் தில் 585 மாணவர்களும், கட்புல அரங்கேற்றக் கலைகள் பல்கலைக் கழகத்தில் 390 மாணவர்களும், சுதேச மருத்துவ நிறுவகத்தில் 200 மாணவர்களும், கம்பஹா விக்ரமராச்சி ஆயுர்வேத நிறுவகத்தில் 20 மாணவர்களும், கொழும்பு பல்கலைக் கழக கணனிக் கல்லூரிகளில் 240 மாணவர்களும், சுவாமி விபுலானந்த அழகியற் கற்கைகள் நிறுவகத்தில் 230 மாணவர்களும் என புதிய கல்வியாண்டில் மாணவர்கள் அனுமதிக்கப்பட விருக்கின்றார்கள்.

நாட்டிலுள்ள 14 தேசிய பல்கலைக்கழகங்கள் மற்றும் 04 நிறுவகங்களில் மொத்தமாக 1.165 மாணவர்கள், மருத்துவதுறைக்கும், இயந்திரவியல் துறைக்கு 1310 மாணவர்களும், உயிரியல் விஞ்ஞானத் துறைக்கு 1045 மாணவர்களும், பௌதீக விஞ்ஞானத்துறைக்கு 1620 மாணவர்களும், முகாமைத்துவத்திற்கு 3155 மாணவர்களும், கலைத்துறைக்கு 5075 மாணவர்களும், சட்டத்துறைக்கு 325 மாணவர்களும், விவசாயத்திற்கு 845 மாணவர்களும் அனுமதிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. (ஓ-5)

# நாடளாவிய ரீதியில் பயிற்றப்படாத ஆசிரியர்களுக்கு பயிற்சி வழங்க நடவடிக்கை

நாடளாவிய ரீதியில் பாடசாலைகளில் பணி புரியும் பயிற்றப்படாத ஆசிரியர்களுக்கு உரிய பயிற்சிகளை வழங்குவதற்கு கல்வியமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

இதுவரை பயிற்றப்படாத நிலையில் பணிபுரியும் ஆசிரியர்கள் மற்றும் ஆசிரிய உதவியாளர்களுக்கு கற்பித்தல் நடைமுறைகள் மற்றும் பாடசாலை முகாமைத்துவம் தொடர்பாக தேவையான பயிற்சிகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

பாடரீதியாவும் மொழி ரீதியாகவும் ஆசிரியர்களுக்கான பயிற்சி நெறிகள் ஒழுங்கு செய்யப்படவுள்ளன.

இதற்கு ஏதுவாக கல்வி வலய மட்டத்தில் பயிற்றப்படாத ஆசிரியர்கள் மற்றும் ஆசிரிய உதவியாளர்களின் விபரங்களை கல்வியமைச்சு சேகரித்து வருகிறது.

பாடசாலை பாட விதானத்தில் அண்மைக்காலம் தொடக்கம் புதிய கல்வி சீர்திருத்த விடயங்கள் கட்டம் கட்டமாக அமுல்படுத்தப்பட்டு வருகின்றன. இந்த மறுசீரமைப்பு நடவடிக்கைகள் குறித்து அதிபர் மற்றும் ஆசிரியர்களை தெளிவுபடுத்துவதன் மூலமாக மறுசீரமைப்பின் உண்மையான இலக்கினை அடைய முடியும் என்று எதிர்பார்க்கப்படுவதாக கல்வியமைச்சு தெரிவித்துள்ளது. (ஓ)

# இராசி பலன்

11.02.2009
(தை29, புதன்கிழமை)
துதியை மாலை 6.11 வரை
பூரம் பின்னிரவு 12.43 வரை
இராகுகாலம் 12.34-2.04
சுபநேரம் 5.04-6.34
அமிர்தம்

| | |
|---|---|
| மேடம் | வேலைச்சுமை, அமைதிக் குறைவு, முயற்சி தாமதம், உறவினர் சந்திப்பு. |
| இடபம் | சுபநிகழ்வு, அதிகபிரயாசை, போசன நன்மை, மனச் சஞ்சலம். |
| மிதுனம் | மனோதைரியம், பெருமையடைதல், காரிய நன்மை, பொருள் சேர்க்கை. |
| கடகம் | போசன சுகக்குறைவு, பண விரயம், ரோக பயம், விவாதம். |
| சிங்கம் | வெகுமானம், நல்ல முயற்சி, தெய்வசிந்தை, போசன நன்மை. |
| கன்னி | இடமாற்றம், சோம்பல் நிலை, பிறருக்கு உதவுதல், முயற்சி தாமதம். |
| துலாம் | தனதானிய சேர்க்கை, நண்பர்கள் சந்திப்பு, தொழில் நன்மை, பாராட்டு. |
| விருச்சிகம் | பெரியோரால் மதிக்கப்படுதல், இஷ்ட சித்தி, ஆரோக்கிய நிலை, விருந்துபசாரம். |
| தனுசு | எதிர்பாராத செலவு, சரீரப் பிரயாசை, வீண் பயம், பிரயாணம். |
| மகரம் | மனக்கவலை, அஜீரணக் கோளாறு, வாகனபயம், காரிய தாமதம். |
| கும்பம் | சென்ற இடத்தில் செல்வாக்கு, காரிய அனுகூலம், குடும்ப மகிழ்ச்சி, தனலாபம். |
| மீனம் | சத்துரு ஜெயம், தடைப்பட்ட காரியம் கைகூடும், ஆரோக்கியம், போசன நன்மை |

வளவன்

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் |
|---|---|---|
| 1 Kg | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 260 | 280 |
| உருளைக்கிழங்கு | 100 | 100-110 |
| பச்சைமிளகாய் | 200 | 200 |
| தக்காளி | 160 | 200 |
| அவரை | 40 | -- |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 80 |
| கோவா | 40 | 80 |
| கரட் | 60 | 70 |
| பூசணி | 60 | 70 |
| புடோல் | 50 | 60 |
| வாழைக்காய் | 120 | 120 |
| சின்ன வெங்காயம் | 35 | 40-50 |
| பெரிய வெங்காயம் | 100 | 120 |
| பாகற்காய் | 80 | 100 |
| வெண்டிக்காய் | 60 | 70 |
| கரணைக் கிழங்கு | 25 | -- |
| பயிற்றங்காய் | 100 | 100 |
| லீக்ஸ் | 110 | 120-130 |
| போஞ்சி | 25 | 50-70 |
| கீரை - 1 பிடி | 15-25 | 15 |
| தேசிக்காய் | 100 | 120 |
| தேங்காய் (ஒன்று) | 20-30 | 35 |



*மட்டுவில் சாந்த நாயகி வித்தியாலய தரம் 1 மாணவர்களை வரவேற்கும் கால்கோள் நிகழ்வில் வித்தியாலய அதிபர் வசந்தாதேவி வைகுந்தநாதன் தென்மராட்சி கோட்டக்கல்விப் பணிப்பாளர் நா. சத்தியநாதன், ஆசிரியர்கள், மற்றும் ஏனைய பிரமுகர்களையும் மாணவர்களையும் படத்தில் காணலாம்.*

## "நாடகம் நாட்டியம்" நாடக நூல்வெளியீடும் அவைக்காற்றுகையும்

(யாழ்ப்பாணம்)

உடுப்பிட்டி மகளிர் கல்லூரி நாடக மன்ற அனுசரணையுடன் திருமதி புனிதவதி சண்முகலிங்கத்தினால் எழுத்துருவாக்கம் செய்யப்பட்ட 'நாடகம் நாட்டியம்' எனும் நாடக நூல் வெளியீடும் 'அறத்தொகு நின்ற அன்பினள்' எனும் அவைக்காற்றுகை நிகழ்வும் இன்று புதன்கிழமை பிற்பகல் 12.30 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் திருமதி கு. இரஞ்சிதம் தலைமையில் நடை பெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வ. செல்வராஜா பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வதுடன் நூலுக்கான வெளியீட்டுரையை ச. இராகவன் நிகழ்த்த மதிப்பீட்டுரைகளை கல்வியியல் கல்லூரி விரிவுரையாளர் க. திலகநாதன் மற்றும் ஹாட்லிக் கல்லூரி ஆசிரியர் பா. இரகுபரன் ஆகியோர் நிகழ்த்துவார்கள்.

இந் நிகழ்வைச் சிறப்பிக்க பழைய மாணவர்கள், அபிமானிகள், கலை ஆர்வலர்களுக்கு பாடசாலைச் சமூகம் அழைப்பு விடுத்துள்ளது. (ஓ)

## வலுவிழந்தோர் சங்கம் வளர வழி வகை செய்யவும்

(யாழ்ப்பாணம்)

யாழ். வலுவிழந்தோர் சங்கம் பல்வேறு வசதி குறைபாடுகளுடன் பத்தொன்பது வருடங்களாக இயங்கி வருகின்றது.

பல பயிற்சி திட்டங்கள், விடுதி வசதிகள், சந்தைப் படுத்தல் வாய்ப்புக்கள் போன்றவற்றை முன்னெடுப்பதற்கு போதிய நிதி மூலம் இல்லாமல் இயங்கி வருகின்றது.

மாற்று வலுக்கொண்டோரால் உற்பத்தி செய்யப்படும் தையல், கைப்பணி, காகிதாதிகள், அலங்கார பொருட்களை கொள்வனவு செய்தோ அல்லது மூலப்பொருட்களை வழங்கியோ, சமூகத்தின் ஒரு பகுதியான மாற்று வலுக்கொண்டோரை இரண்டாந்தர பிரஜைகளாக கருதாமல் வேண்டிய வசதி வாய்ப்புகளை நல்கி உதவுமாறும் வலுவிழந்தோர் சங்கத்தின் தலைவர் டாக்டர் ந. சிவராஜா சார்பில் விடுதிப் பொறுப்பாளர் விஜயச் சந்திரா கேட்டுள்ளார். (ஓ-36)

## மானிப்பாய் பொது நூலகத்தில் சிறுவர்களுக்கு தனிப்பிரிவு

(யாழ்ப்பாணம்)

சிறுவர்களின் கல்வி அபிவிருத்தியைக் கருத்திற் கொண்டு மானிப்பாயில் உள்ள பொது நூலகத்தில் சிறுவர்களுக்கென ஒரு தனிப்பிரிவு ஆரம்பிக்கப்படவிருக்கின்றது.

இதற்கான ஒழுங்குகளை வலி. தென்மேற்கு பிரதேச சபைச் செயலாளர் மேற்கொண்டுள்ளார்.

இப்பிரிவை இயக்குவதற்காக நூலகத்துடன் இணைந்த ஒரு பகுதி ஒதுக்கப்பட்டுள்ளது.

இப்பகுதி திருத்தப்பட்டதும் சிறுவர்களுக்கான தனிப்பிரிவு ஆரம்பிக்கப்படவிருக்கின்றது.

சிறுவர்களுக்கான இந்த நூலகப் பிரிவில் சிறுவர்களுக்கு நன்மை அளிக்கக்கூடிய கல்வி சம்பந்தமான தொலைக்காட்சிச் சேவையும் ஆரம்பிக்கப்படவுள்ளது. (ஓ-5)

## பாடசாலைகளின் திருத்த வேலைகளுக்கு கல்வியமைச்சினால் ரூபா 15 மில்லியன் ஒதுக்கீடு

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டு பாடசாலை களின் அவசர திருத்த வேலை களுக்காக கல்வி அமைச்சு 15 மில் லியன் ரூபா நிதியை ஒதுக்கியுள்ளது.

யாழ். குடாவில் உள்ள 5 வலயங்களின் பாடசாலைகளின் அவ சர திருத்த வேலைகளுக்காக ஒரு கல்வி வலயத்திற்கு தலா 3 மில்லியன் ரூபா வீதம் 5 வலயங் களுக்கும் ஒதுக்கப்பட்டுள்ளது. அவசர திருத்த தேவையுள்ள பாடசாலைகள் தமக்குரிய விண்ணப்பப் படிவங்களை பூர்த்தி செய்து திருத்த வேலைகளை உடனடியாக செய்து முடிப்பதற்கு உதவுமாறு கல்வி வலயங்கள் வேண்டுகோள் விடுத் துள்ளன.

கடந்த வருடம் 'நிஷா' அனர்த்தம் காரணமாக பாதிப்படைந்த பாடசாலைகளை திருத்தம் செய்வதற்கு கல்வி அமைச்சு நிதி ஒதுக்கியி ருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஓ-5)

## குறைகாணும் மனோபாவத்தை வளர்த்துக் கொள்வது ஆரோக்கியமான பண்பல்ல

### செஞ்சொற்செல்வர் ஆறு திருமுருகன் உரை


"நமது முன்னோர் ஆக்கிய இலக்கியங்கள் இன்றைய கால கட்டத்துக்குக் கூறும் செய்திகள் என்ன? என்பதைப் பார்க்க வேண்டிய தேவை இன்று தலையாயதாகும். இதனை நிவர்த்திக்கும் நோக்கிலேயே அகில இலங்கை இந்து மாமன்ற நல்லூர் மண்டபத்தில் 'பெரிய புராணம் காட்டும் வாழ்வியல்' என்ற பொருளில் கருத்தரங்குத் தொடர் ஆரம்பிக்கப் பட்டுள்ளது." இவ்வாறு நல்லூரில் அமைந்துள்ள இந்துமாமன்ற மண்டபத்தில் அண்மையில் இடம்பெற்ற கருத்தரங்கு, கருத்தாடல் நிகழ்வுகளுக்குத் தலைமை வகித்து உரையாற்றும் போது செஞ்சொற் செல்வர் ஆறு. திருமுருகன் இவ்வாறு குறிப்பிட்டார்.

எதிலும் குறை காணும் மனோ பாவத்தை எம்மிடையே வளர்த்துக் கொள்வது ஆரோக்கியமான பண்பல்ல. தேவாரம் பாடும் போது ஒருவர் பிழை விட்டு விட்டாரானால் அதைப் பெரிது படுத்திப் பார்க்கின்ற மனநிலை பலரிடம் காணப்படுகிறது.

இவ்வாறே இலக்கியங்களில் உள்ள குறைகளையும் காண்பதற்கும் பலர் முயல்கின்றனர். ஆனால், இதற்கும் அப்பால் சாதிக்க வேண்டிய விடயங்கள் பல உள்ளன.

வைத்திய சாலையில் பரிதவிக்கும் நோயாளிக்கு ஆறுதல் சொல்வதற்கு இன்று ஒரு இந்து மதத் தொண்டரைக் காண முடியவில்லை இது மிகவும் வேதனைக்குரிய விடயம்.

அன்னை சிவத்தமிழ்ச் செல்வி வைத்திய சாலையில் சிகிச்சை பெற்ற போது துர்க்கா மகளிர் இல்லப் பிள்ளைகளே வைத்தியசாலைக்குச் சென்று பிரார்த்தனையில் ஈடுபட்டார்கள்.



இந்து சமயம் சார்ந்த தொண்டர்கள் இப் பழக்கங்களைப் பயின்று கொள்ளவில்லை. இவ்வாறான குறைகளை நிவர்த்திக்கும் முகமாக விரைவில் இந்த மண்டபத்தில் சைவப் பிரசாரகர் பயிற்சியை ஆரம்பிக்க இருக்கிறோம். அதற்கான பீடத்திட்ட முன்வரைவு இடம் பெற்ற வண்ணம் உள்ளது என்றார்.

நிகழ்வில் *பெரிய புராணம் தோன்றிய காலச் சூழல்* என்ற பொருளில் யாழ். பல்கலைக் கழகத் தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் எஸ். சிவலிங்கராஜாவும் *பெரிய புராணத்தின் இளமை* என்ற பொருளில் கலாநிதி மனோன்மணி சண்முகதாஸும் கருத்துரைகளை வழங்கினர்.

தொடர்ந்து இடம்பெற்ற கருத்தாடல் நிகழ்வின் போது சபையோர் எழுப்பிய பல ஐய வினாக்களுக்குத் தமிழ்த்துறை விரிவுரையாளர் ந. செல்வ அம்பிகை, தமிழ் முதுகலைமாணி மாணவர்களான ச. லலீசன், ம.பா. மகாலிங்கசிவம், அ. கேதீஸ்வரி ஆகியோர் பதிலளித்தனர்.

நிகழ்வில் உயர்தர, பட்டப்படிப்பு மாணவர்கள் பலர் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஓ)


## இடம் பெயர்ந்த மக்களுக்கு சர்வதேச நிறுவனம் உதவி

வன்னியில் இருந்து இடம்பெயர்ந்து மிருசுவில், கோப்பாய் பகுதியில் நலன்புரி முகாமில் தங்க வைக்கப்பட்டுள்ள மக்களுக்கு புலம் பெயர்தலுக்கான சர்வதேச நிறுவனம் சுகாதார பொதிகள் மற்றும் தற்காலிக கொட்டகைகள் அமைத்துக் கொடுத்துள்ளது.


வன்னியில் இருந்து கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் தங்க வைக்கப்பட்டுள்ள 61 குடும்பங்களுக்கு சுகாதார பொதிகள் வழங்கியதோடு மிருசுவில் பகுதியில் உள்ள 430 குடும்பங்களுக்கு சுகாதார பொதிகளை வழங்கியதோடு மிருசுவில் றோ.க. பாடசாலை அதனை அண்டிய பகுதியில் 30 கொத்தணி மலசல கூடங்களையும் 40 கொத்தணி கொட்டகைகளையும் அமைத்து வருகிறது.

இவற்றோடு அப்பகுதியில் உள்ள 4 கிணறுகள் 3 மலசல கூடங்களை திருத்தி அமைத்ததுடன் மறைவிடங்களை அமைத்து மின்மோட்டார், தண்ணீர் தாங்கி பைப்பும் பொருத்தப்பட்டுள்ளன.

தென்மராட்சிப் பிரதேச செயலகத்திற்கு நீர் இறைக்கும் இயந்திரம் அதற்கு பயன்படுத்தும் நீர்க்குழாய்கள் உதிரிப்பாகங்களை வழங்கி முகாமில் தங்கியுள்ளவர்களுக்கு சுத்தமான நீரை வழங்குவதற்கு ஏற்பாடு செய்துள்ளது. இந்நிறுவனத்தால் வழங்கப்பட்டுள்ள சுகாதார பொதியில் 3 ஆயிரம் ரூபா பெறுமதியான சவர்க்காரங்கள், சலவைத்தூள், பற்பசை, சிறிய பெரிய பற்தூரிகை, ஓடிக்கலோன், டெற்றோல், ஷம்போ, கொடிக்கயிறு மற்றும் பெண்களுக்கான சுகாதார பொதிகளும் அடங்குகின்றன. (ஓ-5)



ஏழாலை ஸ்ரீமுருகன் வித்தியாலய தரம்1 இற்கான கால்கோள் விழா அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட ஓய்வு பெற்ற அதிபர் சி. சிவகுமாரன் பாடசாலை அதிபர் மு. செல்வஸ்தான் ஆகியோருடன் தரம் 1 ஆசிரியை திருமதி. ச. தர்மலிங்கம் மங்கள விளக்கேற்றுவதையும் படத்தில் காணலாம்.



ஏழாலை ஸ்ரீமுருகன் வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பாடசாலை கொடி ஏற்றப்படுவதையும் கலந்து கொண்ட பிரமுகர்களையும் படத்தில் காணலாம்.

## மெய்வல்லுனர் போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ்/வட்டுக் கோட்டை கார்த்திகேய வித்தியாலய இல்ல மெய்வல்லுனர் போட்டி இன்று புதன்கிழமை பிற்பகல் 2 மணிக்கு சுப்பர் ஸ்ரார் விளையாட்டுக் கழக மைதானத்தில் அதிபர் ந.சிவசுப்பிரமணியம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வின் பிரதம விருந்தினராக சங்கானைக் கோட்டக் கல்விப் பணிப்பாளர் துரைஎங்கரசு, கலந்து சிறப்பிப்பதுடன் சிறப்பு விருந்தினர்களாக வட்டுதெற்கு ஜே/165 கிராம உத்தியோகத்தர் செ. சிவபாலன், யா/ வட்டு சுப்பிரமணிய வித்தியாசாலை முன்னாள் அதிபர் மா. செல்வராசா, கௌரவ விருந்தினர்களாக இலங்கைச் சீமெந்துக் கூட்டுத்தாபன முன்னாள் பொறியியலாளர் வ. அமிர்தலிங்கம், சமாதான நீதிவானும் வலிமேற்கு மத்தியஸ்தர்சபை உறுப்பினருமாகிய க. இராசையா ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ஓ-4)

❖❖❖❖

அளவெட்டி அருணாசல வித்தியாலயத்தின் வருடாந்த இல்லமெய் வல்லுனர் போட்டி நாளை வியாழக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு அதிபர் கு.ஜெகநாதன் தலைமையில் பாடசாலை மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வின் முதன்மை விருந்தினராக வலிகாம வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் (கல்வி அபிவிருத்தி) திருமதி ச. நாகராஜா, சிறப்பு விருந்தினராக உடற்கல்வித்துறை ஆசிரிய ஆலோசகர் கே. சிவராஜா, கௌரவ விருந்தினராக செ. செல்வநேசன் (நிறுவுனர் குடும்பத்தினர்) ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ஓ-4)

❖❖❖❖

(யாழ்ப்பாணம்)

நீர்வேலி தெற்கு இந்து தமிழ்க் கலவன் பாடசாலையின் மெய்வல்லுநர் போட்டி இன்று புதன்கிழமை பிற்பகல் 2 மணிக்கு பாடசாலை அதிபர் ம. சிவானந்தன் தலைமையில் இடம் பெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். கல்வி வலய ஆரம்பக் கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் பூ.குகதாசனும் சிறப்பு விருந்தினர்களாக நீர்வேலி கருணாலய சிறுவர் இல்லப் பொறுப்பாளர் க. ஞானச்சந்திரன், நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி அதிபர் இ.குணநாதன், நீர்வேலி தெற்கு கிராம அலுவலர் அ. சண்முகவடிவேல், பழைய மாணவர் பொன் சிவானந்தன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ஓ)

❖❖❖❖

(யாழ்ப்பாணம்)

அராலி இந்துக்கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை வியாழக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு கல்லூரி மைதானத்தில் அதிபர் வே. மோகனநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வலி மேற்கு பிரதேசசபை செயலாளர் சு. புத்தி சிகாமணி, சிறப்பு விருந்தினராக அராலி பொதுச் சுகாதாரப் பரிசோதகர் க. முருகதாஸ், கௌரவ விருந்தினராக வடலியடைப்பு சைவப் பிரகாச வித்தியாலய அதிபர் வ. அம்பலநாதன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ஓ-2)

யாழ்.செய்திகள்

## மாவட்ட மட்ட விவாத போட்டி முடிவுகள்

(யாழ்ப்பாணம்)

யாழ். மத்திய கல்லூரி மாணவர் மன்றமும், விவாத மன்றமும் இணைந்து கடந்த திங்கட் கிழமை நடத்திய மாவட்ட மட்ட விவாதச் சுற்றுப் போட்டியில்;

நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம் முதலாம் இடத்தையும், இணுவில் மத்திய கல்லூரி இரண்டாம் இடத்தையும், யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி மூன்றாம் இடத்தையும் பெற்றுக் கொண்டன.

இதில் நெல்லியடி ம.ம. வித்தியாலயத்தைச் சேர்ந்த உ. பிரணவதாசன் சிறந்த விவாதியாக தெரிவு செய்யப்பட்டார். (ஓ)

# இலங்கையில் தமிழர் 67

## இள மக்களும் தமிழ் மக்களும்

திஸ மன்னன் இறந்து சிறிது காலத்தில் அநுராதபுர அரசில் இரு தமிழ் மன்னர்கள் ஆட்சி நடத்தியதாகப் பாளி வரலாற்று நூல்கள் கூறுகின்றன. இவர்களே நாம் அறியும் முதல் தமிழ் மன்னர்கள். இவர்களுக்கு முன்னரும் அநுராதபுரத்தில் தமிழ் மன்னர்கள் ஆண்டிருக்கலாம். ஆனால் அவர்களைப் பற்றி எமக்கு எதுவும் தெரியாது.

இம் முதல் மன்னர்களின் பெயர்கள் பாளியில் ஸேன, குத்தக எனக் கொடுக்கப்பட்டுள்ளன. இருவரும் சகோதரர்கள். இவர்கள் தந்தை குதிரைகளைக் கப்பல்களில் கொண்டு சென்று வணிகம் நடத்திய ஒருவர். இருவரும் அநுராதபுரத்தில் ஆட்சி நடத்திய ஸூரதிஸ்ஸ மன்னனைத் தோற்கடித்து ஆட்சியைக் கைப்பற்றியவர்கள். இருவரும் 22 ஆண்டுகள் நீதி வழுவாது ஆட்சி நடத்தினர்.

இத் தகவல்களைப் பாளிநூல்கள் தருகின்றன. இம் மன்னர்கள் பௌத்தத்துக்குத் தொண்டாற்றியதாகச் செய்தி எதுவும் இல்லை.

ஆனால், சில கிரியைகளைப் புரிவதற்காகத் கதம்பநிதி (மல்வத்து ஓய) நீரை நகருக்கு அருகே கொண்டு வருவதற்குக் கால்வாய் வெட்டுவித்ததாக ஒரு குறிப்பு உண்டு.

நீர் தொடர்பான கிரியைக்காக இவ்வாறு நடவடிக்கை எடுத்தபடியால், இம்மன்னர்கள் பிராமணீய மதத்தைச் சேர்ந்தவர்களாக இருக்கலாம் என ஊகிக்கப்படுகின்றது.

## எல்லாள மன்னன்

ஸேனனும் குத்தகனும் அரச பதவியிலிருந்து அஸேல என்பவனால் நீக்கப்பட்டனர். அதன் பின் பத்து ஆண்டுகளுக்கு அஸேல மன்னன் ஆண்டபின் இன்னொரு தமிழ் மன்னனின் ஆட்சி தொடங்கியது.

இம் மன்னன் பெயர் பாளியில் எளார என்றும் பிற்பட்ட சிங்கள வரலாற்று நூல்களில் எளாள என்றும் கொடுக்கப்பட்டுள்ளது. தமிழில் இப் பெயர் எவ்வாறு வழங்கியது என்பது தெரியவில்லை. தற்காலத்தில் இலங்கை வரலாற்றை எழதியோர் தமிழில் இப்பெயரை எல்லாளன் என எழுதி வந்ததால் இப் பெயர் வடிவம் நிலை பெற்று விட்டது.

இலங்கையில் ஆட்சி நடத்திய தமிழ் மன்னர்களுள் மிகவும் பிரபல்யம் பெற்றவனாக இன்றுவரை பலராலும் நினைவு கூரப்படுபவனாக விளங்குபவன் எல்லாளன் என்றால் அது மிகையாகாது.

பத்தொன்பதாம், இருபதாம் நூற்றாண்டு வரை இலங்கையில் வாழ்ந்த தமிழரால் மறக்கப்பட்ட ஒரு வரலாற்றுப் பேர்வழியாக இருந்தாலும், கடந்த 2200 ஆண்டுகளாகச் சிங்கள மக்களால் மறக்கப்படாத ஒரு தமிழ் மன்னனாக எல்லாளனைக்.கருதலாம்.

இதற்குக் காரணம் எல்லாளனுடைய நீதி பற்றிய கதைகள், மனுநீதி கண்ட சோழன் கதைகள் போல, கடந்த 2200 ஆண்டுகளாகச் சிங்கள மக்கள் மத்தியில் பரம்பரை பரம்பரையாக வழங்கி வந்தமையும், எல்லாளன் – துட்டகாமணி போர் பற்றிய வரலாறு மறக்கப்படாது பேணப்பட்டு வந்தமையும் எனலாம்.

இப்படியான பிரபல்யம் பெற்ற தமிழ் மன்னனைப் பற்றி நமக்குக் கிடைக்கும் தகவல்கள் அனைத்தும் சிங்கள வரலாற்று மரபில் பேணப்பட்ட தகவல்களே. இற்றைக்கு 2000 ஆண்டுகளுக்க முன்னர் பௌத்த சங்கத்தார் அநுராதபுரத்தில் ஆட்சி நடத்தியவர்கள் பற்றி மிகவும் சுருக்கமாக, முக்கிய விஷயங்களை இலகுவில் மனப்பாடஞ் செய்து பேணத்தக்க வகையில், செய்யுள்களை இயற்றித் தலைமுறை தலைமுறையாகப் பாதுகாத்து வந்தனர். அச் செய்யுள்களே பிற்பட்ட பாளி வரலாற்று நூல்களுக்கும் சிங்கள வரலாற்று நூல்களுக்கும் மூலமாக அமைபவை.

இச் செய்யுள்களை வைத்துப் பாளியில் எழுதப்பட்ட மிக முற்பட்ட வரலாற்று நூல்களுள் இன்று வரை பேணப்பட்டு, நமக்குக் கிடைக்கும் நூல் மூன்றாம் நூற்றாண்டிற்குச் சிறிது பின்பாக எழுதப்பட்ட தீபவங்ஸ் நூலாகும். இதில் எல்லாளன் பற்றிச் சுருக்கமாகப் பின்வருமாறு முக்கிய தகவல்கள் கொடுக்கப்பட்டுள்ளன.

"எளார என்ற பெயருடைய சத்திரியன், அஸேலனை வெற்றி கொண்டு நாற்பத்தினான்கு ஆண்டுகள் அறவழியில் ஆட்சி நடத்தினான். ஆசை, அச்சம், வெறுப்பு, மாயை ஆகிய வழிகளை விலக்கி, ஒப்பற்றவனாக அறவழியில் ஆண்டான்.

மாரியிலும் கோடையிலும் மழைக் காலத்திலும் மழை இல்லை. (பின்னர் இவன் அறத்தால்) வானம் ஓயாது மழை பொழிந்தது; ஏழு வாரம் மழை பொழிந்தது. மன்னன் நீதி வழங்கிய வழக்குகள் மூன்று. வானம் இரவில் மழை பொழிந்தது, பகலில் மழை இல்லை"

இத் தகவல்களை மேலும் விரிவுபடுத்தி மஹாவங்ஸ ஆசிரியர் ஐந்தாம் நூற்றாண்டளவில் எழுதியுள்ளார். தீபவங்ஸத்தில் சுருக்கமாக் கொடுக்கப்பட்டுள்ள தகவலை மஹாவங்ஸ நூல் எவ்வாறு விரிவுபடுத்தியுள்ளது என்பதற்குப் பின்வரும் தொடக்கப்பகுதி ஓர் எடுத்துக்காட்டாகும்.


"சோழ நாட்டிலிருந்து இங்கு வந்த உயர் குடிப்பிறந்த எளார என்னும் தமிழன் அஸேல

பேராசிரியர்
**கா. இந்திரபாலா**

மன்னனை வென்று நாற்பத்தினான்கு ஆண்டுகள் தகராறு தீர்ப்பதில் நண்பருக்கும் பகைவருக்கும் சமநீதி செலுத்தி ஆண்டான்"

இவ்வாறு எல்லாள மன்னனைப் பற்றி மிக முற்பட்ட காலத்திலிருந்தே பேணப்பட்டு, பாளி வரலாற்று நூல்களில் சேர்க்கப்பட்ட தகவல்களைக் கொண்டு, அம்மன்னன் ஆட்சி பற்றிய சில வரலாற்று உண்மைகளை அறியலாம்.

இவற்றுள் மிக முக்கியமானது எல்லாளன் ஆட்சி நீதி வழுவாத ஓர் ஆட்சி என மக்களாலும் வரலாற்று மரபைப் பேணியவர்களாலும் கருதப்பட்டது என்பதே. இரண்டாவதாக, எல்லாளன் ஒரு பௌத்தனாக இருக்கவில்லை. (தொடரும்)



வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டியில் கல்லூரி முதல்வர் நோயல் விமலேந்திரன், பிரதமவிருந்தினர் திருமதி. எம்.ராஜாராம் ஆகியோர் உரையாற்றுவதையும், சம்பியன்களாக தெரிவு செய்யப்பட்ட ஜெ.நிகேதன் ச.ஸ்ரீசக்தி, இ.துஸ்யந்தி ஆகியோருக்கு பிரதம விஜந்தினராக கலந்து கொண்ட மீன் பிடியியல் கூட்டுத்தாபனத்தின் பொது முகாமையாளர் ஆர். ராஜாராம் வெற்றிக் கிண்ணங்கள் வழங்கி கௌரவிப்பதையும் படங்களில் காணலாம். (படங்கள் : கோபி)

# சுதேச நாட்டியம் பத்திரிகையும் [1902-1915]

# கல்லடி வேலனும் 6

அச்சுவேலை ஒரு தொழிற்றுறையாக வளர்ந்தமை – அச்சு இயந்திரங்களை அமைத்தவர்கள், தமது வியாபாரத்தின் பகுதி நேரக் காரியமாக, பத்திரிகைகளை வெளியிடக் கூடிய வாய்ப்புக்கள் இருந்தமை, இத்தகைய பத்திரிகைகளின் வெளியீட்டிற்கு இடமளித்த மற்றுமோர் முக்கிய அம்சமாகும்.

இக்காலத்தில் கல்வி கற்றுத் தொழில் வாய்ப்புப் பெற்று இலங்கையின் ஏனைய பகுதிகளில் வாழ்ந்தவர்களும், வெளிநாடுகளில் சென்று வாழ்ந்தவர்களும் பெற்ற பணவருவாய், அவர்கள் மத்தியில் புதிய கலா சார அடையாளங்களை உருவாக்கவும், தம்மை அந்தஸ்து மிக்கவர்களாகக் காட்டிக் கொள்வதற்கும், அச்சு ஊடகப்பயன்பாடும், பத்திரிகைகளும் அவசியமாயின.

இதனால் பல அச்சியந்திரசாலைகள் யாழ்ப்பாணத்தில் நிறுவப்பட்டிருந்தன. அவை இத்தகைய பதிப்பு வேலைகளைச் செய்வதுடன் பத்திரிகைகளையும் அச்சி டுதல் சாத்தியமாயிருந்தது. அச்சியந்திரச் சொந்தக்காரர் கவிஞராகவும் பத்திராதி பராகவும், இலக்கிய கர்த்தாவாகவும், பதிப்பாளராகவும் தொழிற் படக்கூடுமாயிருந்தது. விவாகச் செய்திகளை வெளியிடல், மரண அறிவித்தல்களைப் பதிவு செய்தல், சமரகவிகள் வெளியிடல், உத்தியோக உயர்வு, உத்தியோக இடமாற்றம் ஆகியவற்றை அறியப்படுத்தல் என்பவற்றிற்குப் பத்திரிகைகள் களமாக அமைந்தன. அது மட்டுமன்றி, திருமண விஞ்ஞாபனப்பத்திரங்கள், கிருகப் பிரவேச விஞ்ஞாபனப்பத்திரங்கள், திருமணப் பாராட்டுப் பத்திரங்கள், தாம்பூலப்பைகள் ஆகியவற்றை அச்சிடும் முறை வழக்கத்திற்கு வந்திருந்தது. இறந்தவர்களின் அந்தியேட்டி நாளில் கல்வெட்டு அல்லது சமரகவிகள் இயற்றுவித்து அச்சிட்டு வெளியிடும் வழக்கமும் ஆரம்பிக்கப்பட்டிருந்தது.

### பகுதி 4

### ஆய்வுரையின் தலைப்பும் ஆய்வு பற்றிய விளக்கமும்

'சுதேச நாட்டியம் பத்திரிகையும் கல்லடி வேலனும் 1902 - 1915' என்றதலைப்பில், இந்த உரையினைத் தயார் செய்தமையின் நியாயங்கள் சிலவற்றைத் தெளிவு படுத்த வேண்டியுள்ளது.

ஒரு பத்திரிகை பற்றிய விடயங்களை ஆய்வுக்கு உட்படுத்துவதன் நோக்கம் அக்கால சமூகம் பற்றிய ஒரு பருமட்டான அறிவைப் பெறக்கூடியதாக அமையுமென்பதாகும். இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பகால யாழ்ப்பாணம் பற்றிய விடயங்களை அறிவதற்கு அரசாங்கப் பிரசுரங்கள், மத நிறுவனத்தினரின் அறிக்கைகள் – நூல்கள், தனியாட்களால் செய்யப்பட்ட நூல்கள், கட்டுரைகள், இலக்கியங்கள், கடிதங்கள், அச்சிற்பதிப்பிக்கப்பட்ட உரைகள், எனப் பல தரப்பட்ட ஆதாரங்களைப் பெறமுடியும். இவற்றுடன் அக்காலத்தில் வெளியிடப்பட்ட பத்திரிகைகள் மிக முக்கியத்துவம் மிக்க ஆதாரங்களாக அமையும்.

பத்திரிகைகளில் வந்துள்ள விடயங்களை, வரலாற்றுத்தரவுகளாகப் பயன்படுத்துவதில் உள்ள பலம், பலவீனம் ஆகியவற்றை யும் வரலாற்று ஆய்வாளன் புரிந்து கொள்வது மிவும் அவசியமான தாகும்.

பத்திரிகைச் சாதனம் பத்திரிகைக்கும் வாசகனுக்குமுள்ள ஊடாட்டம் என்ற அடிப்படையில் இயங்கும் சாதனமாகும். இங்கு பல அம்சங்கள் ஒரு மையத்தில் குவிக்கப்படுகின்றது.

அதுவே அப்பத்திரிகை வெளிவரும் பிரதேசமும், அங்கு வாழ்கின்ற மக்கட் கூட்டத்தினரும் ஆவர். இதனைக் குறிப்பதற்கு சமூ கம் என்ற சொல்லைப்பயன்படுத்தலாம். ஒரு சமூகத்தில் பல்வேறு நோக்கம், தேவை, எதிர்பார்ப்பு, பிரச்சினைகள் ஆகியவற்றைக் கொண்டவர்கள் இருப்பர் என்பது பொதுவான விடயம்.


ஒரு பத்திரிகையானது பத்திரிகையின் ஆசிரியர், (அவருடைய அறிவு, இலக்கு, கருத்துநிலை ஆகியவையும்) பத்திரிகைச் சாதனங்களின் உரிமையாளர் பத்திரிகையில் அலுவல் செய்வோர், பத்திரிகையில் விடய தானம் செய்பவர்கள், (தகைமை, சிந்தனை) என்ற ஒரு தொகுதியினரைக் கொண்டதாக இருக்கும்.

**திருமதி. சோ. கிருஷ்ணகுமார்**
சிரேஷ்ட விரிவுரையாளர். வரலாற்றுத்துறை
யாழ்.பல்கலைக்கழகம்.

அத்துடன், அந்தப்பிரதேசத்தில் அதிகாரம் பெற்றவர்களின் கட்டுப்பாடுகள் எவ்வாறிருந்திருந்தன என்றதன் அடிப்படையில், அவ்வரையறைகளை அனுசரித்து வெளிவர வேண்டியதாகவும் இருந்திருக்கும். அடுத்தபடியாக, அந்தப் பத்திரிகையின் நிதிமூலத்தின் நிபந்தனைகளுக்கும், அம்மூலத்தின் தேவை, எதிர்பார்ப்பு ஆகியவற்றைறையும், நிறைவு செய்ய வேண்டியதாக இருக்கும். இதன்பின்னர், இப்பத்திரிகையை வாசிப்பவர்களின், விருப்பு, தேவை, எதிர்பார்ப்பு ஆகியவற்றை நிறைவு செய்ய வேண்டியதாக இருக்கும். (தொடரும்)

# முதுகுவலி குறையாததால் முதலமைச்சர் கருணாநிதிக்கு இன்று அறுவைச் சிகிச்சை

## டாக்டர்கள் குழு அறிவிப்பு



முதல்வரின் ஆஸ்பத்திரி நாட்கள்..

கவனிக்கும் கேமரா கண்கள்!

(சென்னை)

முதுகுவலி குறையாத காரணத்தினால் முதல் அமைச்சர் கருணாநிதிக்கு இன்று அறுவை சிகிச்சை செய்யப்படும் என டாக்டர்கள் குழு அறிவித்துள்ளது.

இது குறித்து அரசு நேற்று முன்தினம் இரவு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில்,

முதல் அமைச்சர் கருணாநிதி முதுகில் ஏற்பட்ட தசைப் பிடிப்பு காரணமாக 15 நாட்களுக்கு மேலாக போரூர் ராமச்சந்திரா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த நிலையில் வலி குறையாத காரணத்தினால் எம்.ஆர்.ஐ. ஸ்கான் எடுக்கப்பட்டு அவரது தண்டுவடத்தில் ஏற்பட்டுள்ள வலியை சரி செய்வதற்கு அறுவைச் சிகிச்சை செய்வதென்ற முடிவுக்கு மருத்துவர்கள் வந்துள்ளார்கள்.

இது குறித்து இரண்டு நாட்களுக்கு முன்பு டில்லியில் இருந்து வந்த டாக்டர் ஏ.ஜெயஸ்வாலும் மற்ற டாக்டர்களும் கலந்து பேசி அறுவை சிகிச்சைசெய்வதென்ற முடிவுக்கு வந் துள்ளார்கள். இந்த அறுவைச் சிகிச்சை இன்று புதன்கிழமை நடைபெறவுள்ளது.

முதல்-அமைச்சர் கருணாநிதியின் நலனை கவனிக்க டாக்டர்கள் குழு ஒன்றும் அமைக்கப் பட்டுள்ளது. (ஓ-5)

# ஈழத்தமிழனின் குரலை இந்திய பாராளுமன்றில் ஒலிக்கச் செய்த 200 பேர் டெல்லி பயணம்

(சென்னை)

டெல்லி பாராளுமன்றத்தின் கூட்டத் தொடர் தொடங்கும் நாளாகிய நாளை வியாழக்கிழமை பாராளுமன்றத்துக்கு முன் பேரணி மறியல் மற்றும் உண்ணா நிலைப் போராட்டம் நடத்த ஈழத்தமிழர் தோழமைக்குரல் அமைப்பினர் சென்னையிலிருந்து நேற்று டெல்லி புறப்பட்டனர்.

ஈழத்தில் நடைபெறும் இனப் படுகொலைகளுக்கு எதிராக தன்னெழுச்சி பெற்றிருக்கும் மாணவர் கூட்டமைப்பு, படைப்பாளிகள், கலைஞர்கள், மனித உரிமைப் போராளிகள், பெண்கள் அமைப்பினர் பத்திரிகையாளர்கள் திரு நங்கைகள் தகவல் தொழில் நுட்ப வல்லுநர்கள் வழக்கறிஞர்கள் உழைக்கும் மக்கள் அனைவரும் இணைந்து ஈழத்தமிழர் தோழமைக்குரல் என்ற புதிய அமைப்பை உருவாக்கியுள்ளார்கள்.

ஈழத் தமிழர் தோழமைக்குரல் அமைப்பாளர்கள் லீனா மணிமேகலை மற்றும் கு.வெங்கடாசலம், படைப்பாளிகள் சுகிர்தராணி, அஜயன்பாலா, மாலதிமைத்திரி மாணவர் கூட்டமைப்பிலிருந்து 60 பேர்உட்பட மொத்தம் 200 பேர் சென்னையில் இருந்து தொடர் வண்டியில் புறப்பட்டுள்ளனர்.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தலைவர் ஆர்.நல்லக்கண்ணு இவர்களை வழியனுப்பி வைத்தார். இந்த 200 பேருடன் டெல்லி பல்கலை மாணவர்கள் ஆயிரம் பேர் இணையவிருக்கிறார்கள் மேலும் டெல்லி தமிழர்களும் இணைந்து 2ஆயிரம் பேராக சேர்ந்து பேரணி மற்றும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடவிருக்கிறார்கள்.

போராட்டத்தின் போது,

✠ ஈழத் தமிழர் மீது சிங்கள அரசு நடத்தி வரும் இனப்படு கொலைப் போருக்கு துணை செய்யாதே

✠ தமிழீழ மக்களின் விடுதலைப் போராட்டத்திற்கு அங்கீகாரம் வழங்கு

✠ தமிழீழ மக்களின் வாழ்வுரிமையை உறுதி செய்

✠ கொல்லப்பட்ட தமிழ் மீனவர்களுக்காக இலங்கை அரசின் மீது நடவடிக்கை எடு.

ஆகிய கோரிக்கைகள் வலியுறுத்தப்பட வுள்ளது. (ஓ-5)

# ஈழத்தமிழர்களுக்கு விடிவு கிடைக்கும் சரத்குமார் நம்பிக்கை

(சென்னை)



அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சியின் தேர்தல் பணிக்குழு ஆலோசனைக் கூட்டம் கட்சித் தலைவர் ஆர். சரத்குமார் தலைமையில் சென்னையில் நேற்று முன்தினம் மாலை நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் நாடாளுமன்றத் தேர்தலை எதிர்கொள்வதற்கு ஏதுவாக ஆயத்தப் பணிகள் மேற்கொள்வது குறித்து ஆலோசிக்கப்பட்டது. தலைமை தேர்தல் பணிக்குழு நிர்வாக கமிட்டியின் பொறுப்பாளராக தலைவர் ஆர். சரத்குமார் நியமிக்கப்பட்டார். பாராளுமன்ற தேர்தலில் கூட்டணி பற்றி முடிவு எடுக்க சரத் குமாருக்கு அதிகாரம் வழங்கப்பட்டு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இக் கூட்டம் தொடர்பாக ஆர். சரத்குமார் அறிக்கை வெளியிட்டுள்ளார். அவ்வறிக்கையில் இலங்கை பிரச்சினை தொடர்பாக தனது கருத்துக்களை தெரிவித்துள்ளார்.

இலங்கை மண்ணில் அப்பாவித் தமிழர்கள் இலங்கை இராணுவத்தால் படுகொலை செய்யப்படுவது தடுத்து நிறுத்தப்பட வேண்டும் என்ற உணர்வுமிக்க கோரிக்கைகள் தமிழகமெங்கும் எரி மலையாக வெடித்துக் கொண்டிருக்கின்றன.

இதன் தொடர்ச்சியாக இந்த கோரிக்கைகளை வலியுறுத்தி தங்கள் இன்னுயிரை மாய்த்துக்கொள்ளக்கூட தயங்கமாட்டோம் என்பதை வெளிப்படுத்தும் விதமாக தீக்குளித்து இறந்துபோன முத்துக்குமார், ரவி, ரவிச்சந்திரன் என்ற பட்டியலில் சென்னை வண்ணாரப்பேட்டையில் அமரேசன் என்பவர் தீக்குளித்து இறந்திருப்பது நம்மை மீளாத் துயரில் ஆழ்த்தியுள்ளது.

இலங்கை பிரச்சினைக்காக தங்களை தாங்களே மாய்த்துக்கொள்ளும் பரிதாப நிலை மேலும் தொடரக்கூடாது என்பதை மீண்டும் மீண்டும் அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி வலியுறுத்துகிறது.

நம் தொப்புள் கொடி உறவுகளான ஈழத் தமிழர்களுக்கு விடிவு கிடைக்கும் என்கின்ற நம்பிக்கையோடு தொடர்ந்து நாம் குரல் கொடுப்போம், போராடுவோம், வெற்றி பெறுவோம். அதுவரையில் இனியும் தங்களை மாய்த்துக்கொள்ளும் செயல்களில் என் அருமை தமிழ்ச் சகோதரர்கள் ஈடுபடக்கூடாது என்று கேட்டுக்கொள்கிறேன் என்று தெரிவித்துள்ளார். (ஓ-5)

# அவுஸ்திரேலியாவின் 4 நகரங்களை அழித்தது காட்டுத் தீ இறந்தோர் எண்ணிக்கை 200 ஆக உயர்வு

(மெல்போர்ன்)

அவுஸ்திரேலியாவில் உள்ள மெல்போர்ன் நகரை ஒட்டிய காட்டுப் பகுதியில் தீப் பிடித்து 5 நாட்கள் ஆகிறது. ஆனாலும் இன்னும் கட்டுப்படுத்த முடியாத அளவுக்கு தீ பரவி வருகிறது.

3 ஆயிரம் சதுர கிலோ மீற்றர் சுற்றளவில் தீப்பிடித்து எரிகிறது. ஒரு பகுதியில் தீயை அணைத்தால் மற்றொரு பகுதியில் தீ புதிதாக பரவுகிறது. நேற்று முன்தினம் மட்டும் 7 இடங்களில் புதிதாக தீப்பிடித்தது. ஹவாவானா என்ற இடத்தில் ஒரு மலையிலும் தீப்பற்றி கொண்டது.

இந்த காட்டுப்பகுதியில் அமைந்திருக்க கிங்லேக், சான்யாயங்க், கில்ஸ்லாண்ட், ஹீல்ஸ்வில்லே ஆகிய நகரங்கள் முற்றிலும் நாசமாகி விட்டன. 11 கிராமங்கள் ஏராளமான பண்ணை தோட்டங்களும் எரிந்து சாம்பலாகி விட்டன.

தீயணைப்பு படையினரும் இராணுவ வீரர்களும் தொடர்ந்து தீயை அணைக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர். ஆனால் போதிய பலன் கிடைக்கவில்லை.

தீயினால் இதுவரை 200 பேர் பலியாகி உள்ளனர். ஆயிரக்கணக்கான கால் நடைகளும் பலியாகி விட்டன. காட்டுப்பகுதியில் இருந்து 8 ஆயிரம் பேர் வெளியேறி இருக்கிறார்கள். தீக்காயம்பட்டு ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெறுபவர்கள் 101 பேரது நிலைமை கவலைக்கிடமாக உள்ளது. (ஓ-5)

# தீவிரவாதிகளின் சொர்க்க பூமியாக பாகிஸ்தான் திகழ்கின்றது

## வெள்ளை மாளிகையில் ஒபாமா பேட்டி

அமெரிக்காவின் அதிபராக ஒபாமா பதவி ஏற்றதற்குப் பிறகு முதன் முதலாக வெள்ளை மாளிகையில் செய்தியாளர்களுக்கு பேட்டி அளித்தார்.



அப்போது அவர், தீவிரவாதிகளின் சொர்க்க பூமியாக பாகிஸ்தான் திகழ்கிறது. தீவிரவாதிகளுக்கு பாகிஸ்தான் தொடர்ந்து அடைக்கலம் கொடுத்து வருகிறது.

தீவிரவாதிகள் மீது இதுவரை பாகிஸ்தான் சரியான நடவடிக்கை எடுக்கவில்லை. இதற்காக எனது தூதரை பாகிஸ்தானுக்கு அனுப்பி நடவடிக்கை எடுக்கும்படி வற்புறுத்தி உள்ளேன்.

பாகிஸ்தானில் உள்ள பழங்குடியினர் நிர்வாக பகுதி முழுவதும் தலிபான், அல் கொய்தா தீவிரவாதிகள் பதுங்கி உள்ளனர். அவர்கள் அங்கிருந்து அகற்றப்பட வேண்டும். இந்த பகுதி முழுவதும் நான் சுற்றுப்பயணம் செய்ய வேண்டும் என்பதை இலட்சியமாக கொண்டு உள்ளேன்.

இது ஆபத்தான பகுதியாக தொடர்வதை ஏற்க முடியாது. தீவிரவாதிகள் வேரோடு அழிக்கப்படுவார்கள். பாகிஸ்தான் மட்டும் அல்ல ஆப்கானிஸ்தான் ஈரானிலும் தீவிரவாதிகள் அடைக்கலம் புக முடியாத படி தடுப்போம் என்று தெரிவித்தார். (ஓ-6)

## பாக். அணு விஞ்ஞானி அமெரிக்காவின் கண்காணிப்பில்

சர்ச்சைக்குரிய பாக்., அணு விஞ்ஞானி அப்துல் காதிர் கான் ஐந்தாண்டுகளுக்குப் பின் சுதந்திரமாக நடமாட அனுமதிக்கப்பட்டிருப்பதால் அவரை அமெரிக்கா கண்காணித்து வருகிறது. வடகொரியா மற்றும் ஈரானுக்கு அணு ஆயுத தயாரிப்பு இரகசியங்களை அளித்த தற்காக, அதிபர் முஷாரப் காலத்தில், 2004ஆம் ஆண்டில் வீட்டுக்காவலில் வைக்கப்பட்டகானுக்கு தற்போது வயது 72. அணுஆயுதத் தொழில் நுட்ப இரகசியங்களை வேறு நாடுகளுக்கு விற்பது அல்லது வேறு நாடுகளுக்கு இரகசியமாக தருவது ராஜதுரோகக் குற்றம்.

இருபது ஆண்டுகளுக்கு முன் ஆப்கானிஸ்தானில் முஜாகிதீன் சக்திகளை ஒடுக்க பாகிஸ்தானை பயன்படுத்திக் கொண்டது அமெரிக்கா. அன்று அமெரிக்க உளவு ஏஜென்சியான சி.ஐ.ஏ.க்கு மிகவும் வேண்டியவராக இருந்தார் கான். அதே சமயம் அவர், டச்சு நாட்டில் இருந்து அணு ஆயுத தொழில் நுட்பத்தை பாகிஸ்தானுக்கு கடத்திய போது, அந்நாட்டில் அவர் கைது செய்யப்பட்டு, பின் விடுவிக்கப்பட்டார்.

அமெரிக்க வெளியுறவு அமைச்சர் ஹிலாரி, "இது கவலை தரும் விஷயம் அணு ஆயுதப் பரவல் விவகாரத்தில் ஏற்பட்டுள்ள பெரும் பிரச்னை" என்று கூறியிருக்கிறார். (ஓ-5)

# மும்பையில் சிறை இருக்கும் அஜ்மலை கொல்லும் பொறுப்பு சோட்டா ஷகீலிடம் ஒப்படைப்பு

(மும்பை)

மும்பையில் தாக்குதலில் ஈடுபட்ட பாகிஸ்தான் தீவிரவாதிகளில் அஜ்மல் என் பவன் மட்டும் உயிருடன் பிடிபட்டான். அவன் கொடுத்த தகவல்கள் மூலம் தான் பாகிஸ்தான் தீவிரவாதிகளின் சதித்திட்டம் முழுமையாக இந்த உலகுக்கு அம்பலப்படுத்தப்பட்டது.

அஜ்மல் எல்லா ரகசிய தகவல்களையும் சொல்லி விட்டதால் லஷ்கர்- இ- தொய்பா இயக்க தீவிரவாதிகள் அவன் மீது கடும் கோபத்தில் உள்ளனர். அஜ்மலை எப்படியாவது கொன்று விட வேண்டும் என்ற வெறியில் உள்ளனர். இதற்காக தற்கொலைப் படை ஒன்றையும் தீவிரவாதிகள் உருவாக்கி உள்ளனர்.

கடந்த மாதம் 29 ஆம் திகதி குஜராத் மாநிலத்தில் தீவிரவாதிகளின் பேச்சை ஒட்டுக் கேட்ட மத்திய புலனாய்வுத்துறையினர் இதை கண்டு பிடித்தனர். இது பற்றி உடனடியாக மத்திய உள்துறைக்கு தகவல் தெரிவித்தனர். அதன் பேரில் மத்திய அரசு மராட்டிய பொலிசை உஷார் படுத்தியது.

தீவிரவாதி அஜ்மல் மும்பை ஆர்தர்ரோடு ஜெயிலில் வைக்கப்பட்டுள்ளதாக தெரிகிறது. அவன் உயிருக்கு தீவிரவாதிகள் குறி வைத்துள்ளதால் அவன் யாருக்கும் தெரியாத ஒரு ரகசிய இடத்துக்கு மாற்றப்பட்டு விட்டதாக கூறப்படுகிறது.

இந்நிலையில் அஜ்மலை தீர்த்து கட்ட பாகிஸ்தானின் ஐ.எஸ்.ஐ.யும் முனைந்துள்ளது. இதற்காக கராச்சியில் வசிக்கும் நிழல் உலக தாதா தாவூத் இப்ராகிம் உதவியை ஐ.எஸ். ஐ நாடி உள்ளது. தாவூத் இப்ராகிம் இந்த சதி திட்டத்துக்கு உதவ சம் மதித்துள்ளான்.

தாவூத் இப்ராகிமின் வலது கரம் போல இருப்பவன் சோட்டா ஷகீல். இவனிடம் அஜ்மலை தீர்த்துக் கட்டும் பொறுப்பை பாகிஸ்தானின் ஐ.எஸ்.ஐ.யும் தீவிரவாதிகளும் வழங்கி உள்ளனர். சோட்டா ஷகீல் கராச்சியில் பதுங்கி இருந்தாலும் மும்பையில் மிகப்பெரிய நெட்வொர்க்கை வைத்துள்ளான்.

கடந்த 2 ஆண்டுகளில் அவனது கூட்டாளிகள் சுமார் 10 பேர் துபாயில் இருந்து மும்பைக்கு ஊடுருவி பதுங்கி உள்ளனர். அவர்கள் மூலம் அஜ்மலை கொல்ல சோட்டா ஷகீல் முயற்சி செய்யக்கூடும் என்று சந்தேகிக்கப்படுகிறது.

இதனால் அஜ்மலுக்கு கூடுதல் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. (ஓ-5)

# ஐ.நா., ஐ.சி.ஆர்.சி.யின் பேச்சாளர்கள் அரசிடம் வருத்தம் தெரிவிக்க வேண்டும்

## வெளிவிவகார அமைச்சின் செயலாளர்

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கை அலுவலகம் மற்றும் சர்வதேச செஞ்சிலுவை சங்கம் உள்ளிட்ட அமைப்புக்களின் பேச்சாளர்கள் மிகவும் பொறுப்புடன் கருத்துக் களைத் தெரிவிக்க வேண்டும்.

இல்லாவிடின், குறித்த நிறுவனங்கள் மீதான நம்பகத் தன்மை குறைந்துவிடும் என்று வெளிவிவகார அமைச்சின் செயலாளர் கலாநிதி பாலித்த கோஹண தெரிவித்தார்.

புதுக்குடியிருப்பு வைத்தியசாலை மீது தாக்குதல் நடத்தியதாக உண்மைக்கு புறம்பான தகவல்களை வெளியிட்ட ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கை அலுவலகம் மற்றும் சர்வதேச செஞ்சிலுவை சங்கம் ஆகியவற்றின் பேச்சாளர்கள் அரசாங்கத்திடம் வருத்தம் தெரிவிக்க வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

இவ்விடயம் தொடர்பில் அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில் கூறியதாவது,

புதுக்குடியிருப்பு வைத்தியசாலை மீது தாக்குதல் நடத்தப்பட்டதாக ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கை அலுவலகம் மற்றும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் ஆகியவற்றின் பேச்சாளர்கள் தகவல் வெளியிட்டனர். ஆனால், அரசாங்கம் ஆகாய மார்க்கமாக புகைப்படங்களை எடுத்து அது பொய்யான தகவல் என்பதை நிரூபித்துள்ளது.

இந்நிலையில் இவ்வாறான நிறுவனங்ளுக்கு முக்கிய விடயம் ஒன்றைக் கூறுகின்றேன். அதாவது ஒரு விடயம் தொடர்பில் தகவல் வெளியிடும் போது நன்கு ஆராய்ந்து விட்டே வெளியிட வேண்டும். அப்போதுதான் வீண் சங்கடங்களை தவிர்க்க முடியும்.

ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கை அலுவலகம் மற்றும் சர்வதேச செஞ்சிலுவை சங்கம் ஆகிய அமைப்புக்கள் நம்பிக்கைக்கு உரிய வகையில் செயற்படுபவை. ஆனால், இவ்வாறான உண்மைக்கு புறம்பான தகவல்களை வெளியிடுவதன் மூலம் இந்த நிறுவனங்களின் நம்பகத்தன்மை கேள்விக்குறியாகி விடும். இந்த விடயத்தில் அரசாங்கம் மிகவும் விழிப்புடன் உள்ளது.

இதேவேளை கொழும்பில் நடைபெறவுள்ள சார்க் நாடுகளின் வெளிவிவகார அமைச்சர்களின் மாநாட்டில் கலந்து கொள்ள இந்திய வெளிவிவகார அமைச்சர் பிரணாப் முகர்ஜி இலங்கை வரவுள்ளார்.

அதற்கு முன்னர் அவர் இலங்கை வரமாட்டார். அதற்கான எந்த சாத்தியமும் இல்லை. அவர் மிகவும் வேலைப்பளு மிக்கவர். அடிக்கடி அவர் இங்கு வந்து கொண்டிருக்க முடியாது என்றார். (ஓ-5)

# அவசர வைத்திய சேவை ஆரம்ப நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

USAID, UMCOR, MTI மற்றும் WHO நிறுவனங்களின் அனுசரணையுடன் யாழ். மாவட்டத்தில் அவசர வைத்திய சேவை இன்று காலை 9.30 மணிக்கு பண்ணை ஆரோக்கிய கிராமத்தில் ஆரம்பிக்கப்படவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக ஐக்கிய அமெரிக்காவின் தூதுவர் றொபேட் ஓ பிளெக் கலந்து சிறப்பிப்பதுடன்,

கௌரவ விருந்தினர்களாக யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் கே. கணேஷ் இலங்கை சர்வதேச மருத்துவக் குழுவின் இலங்கைப் பணிப்பாளர் டொனி வூட்யாட் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (ஓ)

# வவுனியாவில் மேலும் 5 முகாம்களை திறப்பதற்கு அரசு நடவடிக்கை

## மனித உரிமைகள் அமைச்சர் மகிந்த சமரசிங்க

(கொழும்பு)

ஜனாதிபதியின் அழைப்பை ஏற்று அரச கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் வருகின்ற பொது மக்களின் நலன் கருதி வவுனியாவில் மேலும் 5 முகாம்களை திறப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று மனித உரிமைகள் அமைச்சர் மகிந்த சமரசிங்க தெரிவித்தார்.

புலிகளின் பிடியிலிருந்து தப்பித்து வருகின்ற பொதுமக்களுடன் புலிகளும் ஊடுருவி தாக்குதல்களை நடத்துவதனால் அவ்வாறான சம்பவங்கைளை எதிர்காலங்களில் தடுப் பதற்கு மாற்று நடவடிக்கைகளை பாதுகாப்பு தரப்பினர் மேற்கொள்வர் என்றும் அவர் கூறினார்.

மனித உரிமைகள் அமைச்சில் நேற்று முன்தினம் இடம்பெற்ற விசேட ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்து கொண்டு தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அங்கு அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்,

ஜனாதிபதியின் அழைப்பை ஏற்று வன்னியிலிருந்து வவுனியாவிற்கு இதுவரையிலும் 20 ஆயிரம் பொதுமக்களும், படகுகளின் மூலமாக யாழ்ப்பாணத்திற்கு 2 ஆயிரம் பேரும் வருகை தந்துள்ளனர்.

இவர்களுக்கு தேவையான சகல வசதிகளையும் அரசாங்கம் ஏற்படுத்திக் கொடுத்திருக்கின்ற அதேவேளை, வவுனியாவில் மேலும் 5 முகாம்களை நிர்மாணிப்பதற்கு மாவட்ட செயலாளர் மூலமாக நடவடிக்கை எடுக் கப்பட்டுள்ளது.



வன்னியிலிருந்து நேற்று முன்தினம் மட்டும் சிறுவர்கள், முதியோர், ஆண்கள், பெண்கள் அடங்கலாக சுமார் 5 ஆயிரத்திற்கு மேற்பட்ட அப்பாவி பொதுமக் கள் வவுனியா விற்கு வருகை தந்துள்ளனர். இன்னும் பலர் அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்கு வருகை தருவதற்கு தயாராக இருக்கின்றனர்.

அரசாங்க கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் வருகின்றவர்களை அவர்களின் சொந்த இடங்களில் குடியேற்றுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ள அதேவேளை, குறித்த பகுதியின் பாதுகாப்புக்கு உத்தரவாதம் அளிக்கப்பட்டதன் பின்னர் ஐக்கிய நாடுகளின் அகதிகளுக்கான பிரிவின் அத்தாட்சியுடன் அம்மக்கள் மீள குடியமர்த்தப்படுவார்கள்.

வன்னியில் உள்ள மக்களுக்கு தேவையான உணவுப் பொருட்களை வழங்கவதில் அரசாங்கம் தீவிர கவனம் செலுத்தியுள்ளதுடன், கடந்த 29 ஆம் திகதி ஒரு தொகுதி உணவுப் பொருட்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இந்நிலையில், அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்படும் இந்த நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு நல்குகின்ற உலக உணவு திட்டத்தின் பிரதிநிதகளுக்கும் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவுக்கும் இடையில் முக்கிய பேச்சுவார்த்தை ஒன்று இடம்பெற்றுள்ளது.

அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்படுகின்ற நடவடிக்கைகளுக்கு பாதிப்புக்கள் ஏற்படாத வகையிலும் அரசின் சட்ட வரைபுகளை மீறாத வகையிலும் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு உலக உணவுத் திட்டம் இணங்கியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்ற அதேவேளை, வவுனியாவில் சிகிச்சை பெற்று வருகின்ற நோயாளிகள் தங்களது சொந்த இடங் களுக்கு செல்வதற்கு விரும்பினால் அங்கு அனுப்பி வைக்கப்படுவார்கள். (ஓ-6)

# தேசிய பிரச்சினைக்கு தீர்வின்றேல் புதிய பிரபாகரன் உருவாகுவர்

## திஸ்ஸ விதாரண தெரிவிப்பு

(கொழும்பு)

தேசிய பிரச்சினைக்குத் தீர்வொன்றை வைக்காவிட்டால் பிரபாகரன் அழிக்கப்பட்ட பின்னர் வேறொரு பிரபாகரன் உருவாகி விடுவார் என சர்வகட்சிப் பிரதிநிதிகள் குழுவின் தலைவர், அமைச்சர் திஸ்ஸ விதாரண கூறினார்.

பயங்கரவாதம் ஒழிக்கப்பட்ட பின்னர் தேசிய பிரச்சினைக்குத் தீர்வொன்றை முன் வைப்பது அவசியமானது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

அரசாங்கத்தால் தயாரிக்கப்படும் தீர்வுத் திட்டமானது ஐக்கிய தேசியக் கட்சியின் இணக்கத்தையும் பெறுவது அவசியமானது. பிரதான இரண்டு கட்சிகளால் இணங்கப் படாத தீர்வு திட்டமானது தமிழர்களாலும், சர்வதேச சமூகத்தாலும் ஏற்றுக்கொள்ளப் படாது என அமைச்சர் கூறினார்.

அதேநேரம், ஜே.வி.பி., ஜாதிக ஹெல உறுமய மற்றும் மக்கள் ஐக்கிய முன்னணி ஆகிய கட்சிகள் இனப்பிரச்சினை தீர்வு தொடர்பில் வித்தியாசமான கொள்கையையே கொண்டிருப்பதாக குறிப்பிட்ட சர்வகட்சிப் பிரதிநிதிகள் குழுவின் தலைவர், அனைத்துக் கட்சிகளும் இணைந்து இனப்பிரச்சினை தீர்வு தொடர்பான இணக்கப்பாடொன்றுக்கு வருவார்கள் என்ற நம்பிக்கை இருப்பதாகக் கூறினார். (ஓ-5)

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

## குமட்டிக்கீரை

Botanical Name - Celosia nadiflora
Family - Amaranthaceae

முதலில் ஒன்றிரண்டு கொடிகள் சுமார் 10 செ.மீ உயரம் வரைக்கும் வளர்ந்ததும் பின்னர் பல கிளைக்கொடிகள் அதில் தோன்றி நாலா பக்கங்களிலும் படர்ந்து வளரும். சுமார் 3. மி.மீ பருமனுள்ள இதன் கொடியின் ஒரு புறத்தில் சிறிது சிவப்புநிறமுண்டு. மற்றபாகம் பச்சை நிறமுடையது. பெரும்பாலும் சீமைப்பொன்னாங்கணி இலையின் அமைப்புள்ளதும் சிறிது தடிப்புள்ளதுமான இதன் இலை சுமார் 5 முதல் 15 மி.மீ அகலமும், 15 முதல் 30 மி.மீ நீளமும் உள்ளது.

இலைகள் நெருங்கி அடர்த்தியாக இருப்பதில்லை. கொடி, இலை, ஆகியவற்றில் மிக மெல்லிய சுணைகளுண்டு. பொன்னாங்கண்ணிப் பூவைப் போன்ற உருவ அமைப்பும், ஆனால் அதைப் போன்ற இருமடங்கு பருமனுள்ள ஒவ்வொரு பூங்கொத்திலும் ஏராளமான சிறிய பூக்கள் பூக்கும்.

அதி நுண்ணிய ஊதா நிறப் பூவிதழ்களை கூர்ந்து கவனித்து பார்த்தால் தான் அறிய முடியும். சாதாரண முளைக்கீரை விதையைப் போல் இருமடங்கு பருமனும், உருவமும் உடைய இதன் விதைகள் கருமை நிறமுடையன.

### இனவிருத்தியும், பரம்பலும்

பொதுவாக புஞ்சை நிலங்களில், புஞ்சை தானியப் பயிர்களுடனும், வேறு பல தரிசு நிலங்களிலும் தானாக முளைத்து வளரும். மணல் கலப்புள்ள செம்மண், களிமண் பூமிகளில் முக்கியமாக மழை காலங்களில் அதிகமாகக் காணலாம்.

இதை யாரும் பயிரிடுவதில்லை. ஒரு சில இடங்களில் தானாக முளைத்துள்ளவற்றை பிடுங்கி வந்து விற்பனை செய்கிறார்கள்.

யாழ். மாவட்டத்தில் கச்சாய், உசன் பிரதேசங்களில் இன்றும் இதன் பரம்பலை மழை காலங்களில் அவதானிக்கலாம். கொடிகாமம் சந்தையில் இக்கீரை சந்தைப்படுத்தப்படுகின்றது. தற்போதைய பருவகாலத்தில் இக்கீரையை கொடிகாமச் சந்தையில் பெற்றுக் கொள்ள முடியும். விதைகளைத் தூவியும் பயிரிடலாம்.



### மருத்துவப் பயன்கள்

✦ மிக மலிவானதும், அதிக சுவையுடயதும், சக்கை அதிகமில்லாததுமான கீரையாகும்.

✦ இக் கீரையை, இளந்தண்டோடு கடைந்து அல்லது பருப்புடன் சேர்த்து கடைந்து சமைத்து பயன்படுத்தலாம். உடலில் ஏற்படும் வெப்பத்தை தணிக்கும்.

✦ இக் கீரையை நன்றாக அரைத்து அத்துடன் தயிர், தேங்காய் சேர்த்து பச்சடி செய்து பயன்படுத்த உடலில் ஏற்படும் பித்த சம்பந்தமான நோய்களை தணித்து, சிறுநீரை நன்கு வெளிப்படுத்தும்.

✦ இக்கீரையை புளி நீக்கி சமைத்து, நெய் சேர்த்து காலையில் மாத்திரம் 40 நாட்கள் உண்ண ஆண்மை பெருகும்.

✦ இதன் இலைகளை பசுமோரில் வேகவைத்து தினமும் ஒருவேளை கொடுக்க மூல நோய் தணிவடையும்.

✦ இதன் இலைகளை குடிநீரிட்டு அல்லது சமையல் செய்து சாப்பிட மலச்சிக்கல் நீங்கும். பெண்களுக்கு ஏற்படும் வெள்ளை படுதலையும் தணிக்கும்.

✦ இக்கீரையை நீர்விட்டரைத்து, வெங்காயச்சாறு அவ்வெடை சேர்த்துக் காய்ச்சி, அழலாலுண்டாகும் தீராத தலைவலிக்கு பற்றிடலாம்.

### குறிப்பு

இந்திய சித்தமருத்துவ நூல்களில் இக்கீரையை அதிகம் இலங்கை வாழ் மக்கள் பயன்படுத்துவதாகக் கூறப்பட்டுள்ளது. ஆனால் யாழ்ப்பாணத்து மக்கள் இக் கீரை தானாக உருவாகி பரம்பிக் காணப்பட்டாலும் அதைப் பயன்படுத்தி பயன் பெறத் தவறுகிறார்கள்.

ஒருசில கிராமங்களே இதன் பயனையறிந்து பயன்படுத்தி வருகிறார்கள். சிறியோர் முதல் வயோதிபர் வரை யாவரும் பயன்படுத்தக் கூடிய சத்துக்கள் மிகுந்த கீரையாகும்

டாக்டர் திருமதி விவியன் சத்தியசீலன் (M.D.C.S)
சிரேஷ்டவிரிவுரையாளர், சித்த மருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம், கைதடி

இக் கீரையை நெய்யில் வதக்கி பருப்புடன் சேர்த்து கடைந்து உணவில் கலந்து உண்ணுதல் உடலுக்கு உரமும் குளிர்ச்சியும் உண்டாகும். வித்து, இரத்தம் ஆகியவற்றை பெருக்கும். ப்சியைத் தூண்டும்.

# யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பெண் முகத்துவாரத்தில் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பெண் முகத்துவாரம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார் என யாழ். மனித உரிமை ஆணைக் குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இச்சம்பவத்தில் கந்தசாமி சுமதி (வயது 40) என்பவரே கைது செய்யப்பட்டவராவார். பிரஸ்தாப நபர் வெளிநாடு செல்வதற்காக முகத்துவாரத்தில் ஒருவருட காலமாக தங்கியிருந்தவேளை சென்ற மாதம் 28 ஆம் திகதி முகத்துவார பொலிஸாரினால் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ளதாக முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஓ-7)

# இடம் பெயர்ந்தவர்களின் நலன்களை கவனிக்கும் பொறுப்புக்கள் ஐ.நா. நிறுவனங்களிடம் பகிர்வு

(கொழும்பு)

வன்னிப் பிரதேசத்தின் போர்ச் சூழலில் இருந்து இடம் பெயர்ந்து வவுனியாவுக்கு இதுவரையில் வந்துள்ள 13 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்களின் நலன்கள், அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக யு.என். எச்.சி.ஆர்., யுனிசெப், உலக உணவுத் திட்டம் உட்பட பல ஐ.நா.தொண்டு நிறுவனங்களிடம் பொறுப்புக்கள் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ மீள்குடியேற்ற அமைச்சர் ரிசாட் பதியுதீன் தெரிவித்தார்.

திங்கட்கிழமை வவுனியாவுக்கு விஜயம் செய்து வவுனியா அரசாங்க அதிபர் திருமதி பி.எஸ்.எம்.சாள்ஸ் உட்பட பல முக்கிய திணைக்கள அதிகாரிகள், யு.என். தொண்டு நிறுவனங்களின் பிரதிநிதிகள் அடங்கலாக பல்வேறு தொண்டு நிறுவனங்களின் முக்கியஸ்தர்கள் கலந்து கொண்ட கூட்டத்தில் குடிநீர், மலசலகூடம், குடியிருப்பு மற்றும் பாதுகாப்பு, உணவு, உணவல்லாத நிவாரணப் பொருட்கள், வைத்தியம், கல்விச் செயற்பாடுகள் உட்பட பல்வேறு விடயங்களை நிறைவேற்றுவதற்கான தலைமைப் பொறுப்புக்கள் ஐ.நா. தொண்டு நிறுவனங்களிடம் பகிர்ந்தளிக்கப்பட்டன.

குடிநீர், மலசலகூட வசதிகள், சுகாதாரம் மற்றும் இடம்பெயர்ந்த மாணவர்களின் கல்வி ஆகியவற்றிற்கான தலைமை பொறுப்பு யுனிசெப் நிறுவனத்திடமும், குடியிருப்புக்கான வாழ்விட வசதிகள், உணவு சாராத நிவாரண பொருட்கள், பாதுகாப்பு தொடர்பிலான இடம் பெயர்ந்த மக்களின் பதிவுகள், அதனோடு இணைந்த பல்வேறு பணிகளுக்கான தலைமைப் பொறுப்புக்கள் யு.என். எச்.சி. ஆரிடமும், உணவு மற்றும் நிவாரணம் தொடர்பான தலைமை பொறுப்பு உலக உணவுத்திட்ட நிறுவனத்திடமும் ஒப்படைக்கப்படுவதாக இந்தக் கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டுள்ளது.

இடம்பெயர்ந்த மக்களின் தேவைகள், அடிப்படை வசதிகளை நிறைவேற்றுவதில் இந்த சர்வதேச தொண்டு நிறுவனங்களுடன் இணைந்து ஐ.ஓ.எம்., ஒக்ஸ்பாம், ஐ.சி.ஆர். சி., சொலிடர், என்.ஆர்.சி., சேவ் த சில்ரன், ஸோஆ உட்பட பல்வேறு தொண்டு நிறுவனங்களும் இணைந்து செயற்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், இந்தப் பணிகளை நிறைவேற்றுவதற்கு ஒவ்வொரு பொறுப்புக்கும் அரச தரப்பில் வழிகாட்டுவதற்கும் இணைந்து செயற்படுவதற்குமான 8 அதிகாரிகளும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இந்த அரச அதிகாரிகள், தொண்டு நிறுவனங்களின் பிரதிநிதிகள் ஆகியோருக்கு பாதுகாப்பு உட்பட பல்வேறு விடயங்களிலும் அனுசரணையாக வழிகாட்டிச் செயற்படுவதற்காக இரண்டு இராணுவ அதிகாரிகளும் விசேடமாக நியமிக்கப்பட்டுள்ளார்கள்.

இவர்களுடன் இணைப்பதிகாரியாக அனர்த்த முகாமைத்துவ மீள்குடியேற்ற அமைச்சின் இணைப்பதிகாரியாகிய ஓய்வு பெற்ற இராணுவ அதிகாரியாகிய லால் வீரக்கோன் இந்த இணைந்து செயற்படுவார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஓ-5)

## தண்டப்பணத்தின் மூலம் ரூபா 85 இலட்சம் வருமானம்

கடந்த வருடம் கெக்கிராவ பொலிஸ் நிலைய குற்றத்தடுப்புப் பிரிவு அரசாங்கத்துக்கு எண்பத்து நான்கு இலட்சத்து தொண்ணூற்றேழாயிரத்து இருநூற்றைம்பது ரூபா தண்ட வருமானமாகப் பெற்றுக் கொடுத்துள்ளதாக குற்றத்தடுப்புப் பிரிவு பொறுப்பதிகாரி உபபொலிஸ் பரிசோதகர் ஆர்.எம்.ரத்நாயக்க தெரிவித்தார்.

சட்டவிரோத மதுபானம் விற்பனை செய்தல் மற்றும் பயன்படுத்துதல், கஞ்சா கடத்தல் மற்றும் விற்பனை செய்தல், அனுமதிப்பத்திரமின்றி மணல் ஏற்றிச் செல்லல் ஆகிய குற்றச்சாட்டுக்களின் பேரில் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டவர்களிடமிருந்தே மேற்படி தண்டம் அறவிடப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (ஓ-6)

## இலங்கையில் யுத்த நிறுத்தத்தை ஏற்படுத்த சர்வதேச சமூகம் விரைந்து செயற்படவேண்டும்

### இளவரசி டயானா சமாதான அறக்கட்டளை கோரிக்கை

(கொழும்பு)

இடம் பெற்று வரும் யுத்தத்தை உடனடியாக நிறுத்துவதற்கு சர்வதேச சமூகம் விரைந்து செயற்பட வேண்டிய காலம் மலர்ந்துள்ளதென இளவரசி டயானா சமாதான அறக்கட்டளை கோரிக்கை விடுத்துள்ளது.

இலங்கையில் நிலவும் பாரதூரமான நிலைமை குறித்து சர்வதேச சமூகம் விழிப்புடன் செயற்படவேண்டும் எனவும் பரிசுத்த பாப்பரசர் 16ஆம் பெனடிக் ஆண்டகையின் வேண்டுகோளுக்கு மதிப்பளிக்கப்பட வேண்டும் எனவும் டயானா சமாதான அறக் கட்டளை தெரிவித்துள்ளது.

யுத்தத்தில் ஈடுபட்டு வரும் அனைவரும் சர்வதேச யுத்த சட்ட விதிகளுக்கு மதிப்பளித்து செயற்பட வேண்டியது அவசியம் எனவும் அந்த அறக்கட்டளை குறிப்பிட்டுள்ளது. (ஓ-6)

# நிஜத்தின் முகம்......... நிஜத்தின் முகம்.........

## ‘யாழ்ப்பாணத்தில் பெண்கள் எதிர்கொள்ளும் அவலங்களைக் காட்டும் உண்மைச் சம்பவங்கள்’

இனவிருத்தி என்பது குடும்ப இயக்கத்தின் இயற்கைச் செயற்பாடாக இருந்த போதிலும் கருவுறுதல், குழந்தையைப் பிரசவித்தல் என்பன பெண்ணோடு தொடர்புடைய விடயங்களே கருவுற்ற பெண் குழந்தையைப் பிரசவிக்கும் கால இடைவெளியில் அவளது சுகாதாரம், போசாக்கு என்பவற்றை அக்கறையோடு அவதானிப்பதில் குடும்பம் மட்டுமன்றி மருத்துவ தாதியர், குடும்ப நல அலுவலர், வைத்தியர்கள் ஆகியோரது இடைவிடா கண்காணிப்பும் அவளுக்குத் தேவைப்படுகின்றது. இவற்றைப் பொறுப்போடு கவனிக்க வேண்டியது அவளது கணவனின் பாரிய பொறுப்பு மட்டுமன்றி கர்ப்ப காலத்தில் அவளை அன்போடும் ,ஆதரவோடும், பாதுகாக்க வேண்டிய பொறுப்பும் உண்டு.

யாழ்ப்பாணப் பிரதேசத்தில் யுத்தம் காரணமாக ஏற்பட்ட இடப்


# கருவறைக்கு யார் காவல்?

பெயர்வுகள்,உணவுத்தட்டுப்பாடு, போசாக்கான உணவு பற்றாக்குறை என்பன பெண்களையும் சிறுவரையும் மிக மோசமாகப் பாதித்துள்ளது. கர்ப்பிணிப் பெண்கள் இடப்பெயர்வின் மிக மோசமான பாதிப்புக்களை அனுபவிப்பதோடு பாதுகாப்பான பிரசவத்திற்கான வசதிகளைக் கூட இழந்த நிலையே காணப்படுகின்றது.

வைத்தியசாலைகள் இயங்கிய போதிலும் வைத்தியர் பற்றாக் குறை, மருந்துகள் போதியளவு இன்மை போன்ற பல்வேறு காரணிகள் குறைபாடாகவே காணப்படும் நிலையில் அவர்கள் சுகாதார நிலைமைகளிலும் பாரிய தாக்கம் ஏற்பட்டுள்ளது. இவ்வாறான போர்ச் சூழலில் சிக்கிக் கொண்ட பெண்களின் இனப்பெருக்க சுகாதார பராமரிப்பு என்பது மிக சிக்கலான ஒன்றாக உள்ளது. போதிய வைத்திய கவனமின்றி பிரசவம் இடம்பெறும் போது அது சில சமயங்களில் உயிராபத்தையே ஏற்படுத்தக்கூடிய நிலைக்கு பெண்களைத் தள்ளக்கூடும். இவை தவிர பாதுகாப்பான கருத்தடை மாத்திரைகளைப் பெற்றுக்கொள்ளும் வசதிகளையும் இப்பெண்கள் இழந்து விடுகின்றனர்.

பெண், தன் உடலைப் பற்றிய உரிமைகளை அறியாதவளாக கணவனின் ஆசைகட்கு எந்நேரமும் இணங்குபவளாகவே காணப்படுகின்றாள். தனது உடலின் பலவீனங்களை முன் வைத்து குடும்ப வாழ்வை பின்தள்ளிப்போடும் உரிமை கூட பெண்ணிடம் காணப்படுவதில்லை. கர்ப்பம் வேண்டுமா? வேண்டாமா? என்று தீர்மானிக்கும் உரிமை கூட அவளிடம் காணப்படாத நிலையே இன்று குடும்பங்களிடையே காணப்படுகின்றது. பிள்ளைகட்கு இடையில் நிலவவேண்டிய கால இடைவெளி,கர்ப்பம் தரிக்கக் கூடிய உடல் தகுதி என்பன பெண்ணிற்கு தேவையான விடயங்களே. ஆனால் அவளிடம் இவை பற்றி சித்தித்து செயலாற்றக்கூடிய சக்தி உள்ளதா? திருமணமானதும் ஓரிரு மாதங்களில் என்ன ஏதாவது விவேகம்... என்று கதைகள் ஆரம்பிக்கும்,காலம் கடந்தாலோ, பிள்ளைகளையும் காணோம் மலடியோ தெரியாது என்று வசைபாடும் கூட்டம் இன்னோர் புறம் . இச் சமூக இடர்பாடுகளில் சிக்கித் தவிப்பவள் பெண். குழந்தைகளைப் பெறும் இயந்திரமாக செயற்படும் பெண் குழந்தைகளை வளர்த்தல், பாதுகாத்தல் போன்ற சகல செயற் பாடுகளிலும் தன்னை ஈடுபடுத்தி வருத்திக் கொள்ளும் அதே வேளை கணவன்,தகப்பன் என்ற பொறுப்பை கைவிட்டு தனது இன்ப சுகங்களுக்காக மறுமணம் செய்து அநாகரீகமாக நடந்துகொள் வதற்கு எமது சமூகமும் விதிவிலக்கல்ல. கணவன், மனைவி என்ற உறவை அவர்கள் இருவர் விருப்பப்படி சட்டம் ஏற்றுக்கொள்ளும் வகையில் பிரிக்கப்படலாம். ஆனால், அவர்கள் பிள்ளைகட்டு அம்மா, அப்பா என்ற உறவை என்றுமே பிரிக்க முடியாது. பிள்ளைகளின் இயற்கைப் பாதுகாவலன் பிள்ளையின் தகப்பனே. இதனை எக் காலத்திலும் யாரும் மறுக்க முடியாது. ஆயினும் எமது சமூகத்தில் இப் பிள்ளைக்கு தான் தகப்பன் இல்லை என்று தாயின் மீது பழி சுமத்துவபவர்களும் இல்லாமல் இல்லை. இவ்வாறான அநீதிகள் பற்றி அறிவு பெற்றிருப்பதற்கு அவற்றை பெறுவதற்கான சட்ட நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கும் பெண்கள் உரிமை உடையவர்கள். ஆனால் சட்ட நடவடிக்கை எடுப்பதற்கும் தமது உண்மை நிலையை எடுத்துக் கூறுவதற்குப் பெண்கள் தயங்குவது ஏன்? சமுதாயம் மேலும் மேலும் கொடுக்கும் அடக்குமுறையா? அல்லது அழுத்தங்களா? சட்டம் என்றால் இது பொலிஸ் ஸ்ரேசனுக்கும் நீதிமன்றிற்கும் மட்டும் தான் நமக்கு இதெல்லாம் ஏன் தெரிய வேண்டும் என்று கேட்கும் பெண்கள் பலர். சட்ட நுணுக்கங்களை தெரிந்து கொள்வதன் மூலம் பெண்கள் தமக்கு வரக்கூடிய சிக்கல்களை முன் கூட்டியே தவிர்க்க சட்ட அறிவு உதவுகிறது.

எங்கள் சமூகத்தில் பெரும்பாலான பெண்கள் குடும்பத்தை கட்டிக்காக்கும் பொறுப்பைத் தாமே ஏற்றுக் கொள்ளவிளைவதனால் தமக்கு குடும்பத்திற்குள் ஏற்படும் இன்னல்களை மறைத்து வாழ முயல்கின்றனர். ஆனால் இறுதியில் அவர்கள் உடலாலும், மனதாலும் வேதனைகளையே சுமக்க வேண்டிய கட்டாயத்திற்குள் செல்கின்றனர். இவ்வாறான துன்பங்களை அனுபவிக்கும் பெண்கள் இந்தச் சமூகத்தினுள் இருக்கின்றனர். இச் சந்தர்ப்பத்தில் கருக்கலைப்பால் அவல நிலைக்கு உள்ளான ஒரு பெண்ணின் உண்மைக்கதையை குறிப்பிட வேண்டியது அவசியமானது.



காயத்திரி ஒரு ஆசிரியை .அவளிற்குப் பெற்றோர் பேச்சுத் திருமணம் மூலம் சுரேஸை வரணாகத்தேடிக் கொடுத்தனர். சுரேஸ் ஓர் வாகனச் சாரதி. இருவரது திருமண வாழ்வும் இனிதே சென்றதன் பயனாக இரண்டு குழந்தைகள் கிடைத்தன. காயத்திரி திருமணமாகி மூன்று வருடங்களிற்குள் இரண்டு குழந்தைகளைப்பிரசவித்தாள். வேலைக்குச் செல்லும் முன் வீட்டு வேலைகளைச் செய்து வைத்து விட்டு பிள்ளைகளையும் பொறுப்பாக பராமரிப்பதற்கு தனது தாய் வீட்டில் ஒப்படைத்து விட்டுச் செல்ல வேண்டும். மீண்டும் வீடு திரும்பி வந்த தும் பிள்ளைகளைப் பார்த்து இரவு வேலைகளைச் செய்து நித்திரைக்குச் சென்றாள்.அங்கும் கணவனின் ஆசைகளினையும் நிறைவேற்ற வேண்டும். இவ்வாறாகவே காயத்திரியின் வாழ்வுச் சக்கரம் ஒவ்வொரு நாளும் உருண்டோடும்.

காயத்திரி வேலைக்குச் செல்லுமுன்னரே சுரேஸ் வீட்டை விட்டுச் சென்று விடுவான். மதிய உணவை வந்து சாப்பிட்டு விட்டு பின்னர் மாலையில் தான் வீடு வருவான். காயத்திரி இரண்டு பிள்ளைகளிற்கு தாயாகியதில் இருந்து சுரேஸ் காயத்திரியுடன் முரண்பட்டுக்கொண்டே இருப்பாள். பிள்ளைகள் மீதும் அன்பைக் காட்டுவது கிடையாது. தன் தேவைக்குப் பயன்படும் இயந்திரமாகவே காயத்திரியைப் பயன் படுத்தத் தொடங்கினான். அதிகமான பிள்ளைகளைப் பெறுவதையும் விரும்புவதில்லை. ஆனால் மீண்டும் கருத் தரிக்காது இருப்பதற்கு நிரந்தர கருத்தடை சிகிச்சையை இருவரும் செய்யவில்லை. காயத்திரி மட்டும் கருத்தடை முறைகள்ள பயன் படுத்தி வந்தாள். இப்போதெல்லாம் ஆண்களுக்கான கருத்தடை முறைகள் பல பல.ஆனால், சுரேசை எத்தனை தடவை கேட்டும் அவன் அதனைச் செய்வதற்கு மறுத்துவிட்டான். இதனால் காயத்திரியே தொடர்ந்து கருத்தடை முறைகளை பயன்படுத்தும் போது அவளிற்கு அது ஏற்றுக் கொள்ள முடியாத நிலைமைகளை உடலில் காட்டியது. இந் நிலையில் காயத்திரி கருத்தடை முறைகளைப் பயன்படுத்தாது விட்டு விட்டாள். இதனால் அவளிற்கு மூன்றாவது கரு உருவாகி விட்டது.

கர்ப்பவதியாகிய காயத்திரியால் வழமைபோல் செயற்பட முடியவில்லை. இந்த இயலாமையை அறிந்த சுரேஸ் அந்தக் கருவைக் கலைக்கும்படி தொந்தரவு கொடுக்கத்தொடங்கினான். இக் கருவை கலைக்காது விட்டால் நான் உன்னை விட்டுப் பிரிந்து விடுவேன் என்று அச்சுறுத்துவான் தன் பிள்ளையையே அழிக்கும் தந்தை எப்படி அந்த கருவிற்கு காவலனாக இருப்பான்? தனது குடும்பம் கௌரவமாக இருக்க வேண்டும் என நினைத்து காயத்திரி கருவைக் கலைக்க முன் வந்தாள். இதற்காக வைத்தியர்களிடம் சென்ற போது அவர்கள் காயத்திரியின் கரு வளர்ந்து விட்ட நிலையில் இருப்பதால் அவ்வாறான எவ்வித முயற்சியும் ஆபத்தை ஏற் படுத்தும் என அறிவுரை வழங்கினர்.

ஆனால், சுரேஸ் கை மருந்துகளைக் கொடுத்து கருவைக் கலைத்துவிட முயன்றதன் விளைவாக காயத்திரிக்கு குருதிப் போக்கு இடம்பெற்று கர்ப்பமும் கலைந்தது அவளும் நோய் வாய்ப் பட்டாள். வைத்தியர்களிடம் சென்ற போது அவர்கள் காயத்திரியால் தாம்பத்திய உறவில் ஈடுபட முடியாது என்று கூறிவிட்டனர். இதனை அறிந்த சுரேஸ் மிக எளிமையாக காயத்திரியை கை விட்டு வேறு திருமணம் செய்து விட்டான். தனது பிள்ளைகளுக்குக்கூட பொறுப் பான தந்தையாக இருக்க வேண்டும் என்ற எண்ணப்பாடு கூட சுரேஸுக்கு இருக்கவில்லை இவ்வளவு நாளும் தன்னையே கொடுத்த காயத்திரியையும் கைவிட்டு விட்டான்.

குடும்பச் சுமைகள் எல்லாம் பெண்கள் மீது சுமத்தப்படும் இந்த அவலம் தீராதா? உண்மையில் பெண் என்பவள் பிள்ளையைப் பெறும் இயந்திரமா? அல்லது கணவனின் ஆசையை நிறை வேற்றுபவளா? அவளிற்கு என்று ஆசைகள், அலுப்புகள் இருப்பதில்லையா? இங்கே தனக்குப் பயன்பாடுஇருக்கும் வரை காயத்திரியை உபயோகித்துவிட்டு அவளால் இயலாமை என்றவுடன் வேறு பெண்ணை நாடுவது எந்த விதத்தில் நியாயமானது? பிள்ளைகளின் எதிர்காலம் கூட நினைவில் வருவதில்லையே? பிள்ளைகள் பற்றி சிந்தித்து அவர்களிற்காக தன்னை கொடுப்பவளாகவும் பெண்ணே இருக்கிறாள் அதே வேளை கணவனிற்காக வாழ்பவளாகவும் அவளே இருக்கிறாள். இந்த சமூகத்தில் பெண்கள் தான் இத் தனைவேதனைகளையும் தாங்கிக்கொள்கின்றனர் என்பது புரியும்.

கணவன் மனைவி இருவரும் இணைந்து இயங்கும் குடும்பத் தில் பெண் தனது கடமைகளைச் செய்பவளாக இருப்பாளே தவிர தன்னைக்கவனிப்பவளாக இருப்ப தில்லை. உணவுகளினைக் கூட கணவனிற்கும் , பிள்ளைகளிற்கும் கொடுத்து விட்டு மீதியை தான் உண்கிறாள். இதனால் அவளிற்கு போசாக்கான உணவு கூட கிடைப் பது இல்லை. பெண் தனது சக்திக்கு மீறி செயற்படுகின்றாள். இதனால் இயல்பாகவே இயலாமை வந்து சேர்கின்றது. அவள் எல்லாவற்றையும் மறந்து தனது குடும்பம் கணவன் ,பிள்ளைகள் என வாழ்கின்றாள் அவள் கட்டிக்காக்கும் குடும்பம் உடையும் போதும் பெண்ணே அதன் தாக்கத்தை எதிர்கொள்கின்றாள்.

கணவன் கைவிட்டுச் சென்றாலும் அவன் கொடுத்த பிள்ளைகளிற்காக தன்னையும் அர்பணித்து பெண்கள் வாழ்கின்றனர். இங்கு ஆண்கள் பெண்களை ஒரு. உயிரியாக நினைக்க மறக்கின்றனர். தாங்களே எப்போதும் மேலான்மை செலுத்துபவர் களாகவும் பெண்களை போகப்பொருளாகவும் நினைக்கின்றனர். எமது சமூகத்தில் பெண்களினை விட்டுப் பிரிந்து வேறு திருமணம் செய்யும் ஆண்களே அதிகமாக உள்ளனர். ஏன்? இந்நிலமை? ஒவ்வொரு ஆண்களும் தங்களைப்போல்தானே பெண்களும் விருப்பு , வெறுப்புகளைக்கொண்டவர்கள் என சிந்திக்க தவறுகின்றனர். குடும்பத்தில் பெண்ணிற்குரிய பொறுப்புகளைப்போல் ஆணும் பொறுப்புக்களை ஏற்றுகொள்ள நினைப்பதில்லை.

**ஜோதி**

பாதிப்புக்களை எதிர்கொள்ளும் பெண்கள் எல்லோரும் அதில் இருந்து வெளிவருவதில்லை. காயத்திரி ஒரு ஆசிரியையாக இருந்த படியால் தனக்கு வரும் வருமானத்தைக்கொண்டு தனது பிள்ளைகளை வழி நடத்துகின்றாள். தன் கணவன் மீது சட்ட நடவடிக்கை எடுக் கும் உரிமை இருந்தும் கூட காயத்திரி அதனைச் செய்யவில்லை. தனது பிள்ளைகளிற்கு நேரான வழிகாட்டும் தாயாக இருக்கிறாள்.

எங்கள் சமூகத்தில தந்தை செய்யும் தவறுகளால் எத்தனையோ பிள்ளைகள் தந்தையின் அன்பிற்காக ஏங்குபவர்களாக, ஒழுக்கங்களை மீறுபவர்களாக சமூக சிதறல்களை எதிர்கொள்கின்றனர்.

*சமூகத்தில் பெண்கள் மட்டுமா சுமை தாங்கிகளாக இருப்பது .*

**மகளிர் அபிவிருத்தி நிலையம், யாழ்ப்பாணம்**

(2099)

பிறருக்குப் போதிப்பவன் தன்னை மறந்து விட வேண்டாம்.

– அப்துல் றஹீம்

வலம்புரி

## தயாநிதி மாறனுக்கு ஏற்பட்ட திடீர் மாறாட்டம் ஏன்?

ஆட்சியில் இருந்தால்தான் இலங்கையில் அமைதியை ஏற்படுத்த முடியும் என இந்திய மத்திய அரசின் முன்னாள் அமைச்சர் தயாநிதி மாறன் தெரிவித்துள்ளார்.

தயாநிதிமாறன் முரசொலி மாறனின் மகன். கலைஞர் கருணாநிதியின் சகோதரியின் பேரன்.

இந்திய மத்திய அரசில் தகவல் தொழில்நுட்ப அமைச்சராக இருந்தவர். சன் தொலைக்காட்சியின் நிர்வாகப் பணிப்பாளரும் தயாநிதிமாறனின் சகோதரருமான கலாநிதி மாறனின் ஊடக நடவடிக்கையால் கலைஞர் கருணாநிதியின் குடும்பத்துடன் பகைமையை சம்பாதித்தவர்.

இதனால் மத்திய அமைச்சர் பதவியிலிருந்து தயாநிதிமாறன் விலகிக் கொண்டார்.

இந்தியாவைப் பொறுத்தவரை நல்லதொரு அமைச்சரை குடும்பப் பிரச்சினை காரணமாக இழக்க வேண்டியதாயிற்று.

இருந்தும் தற்போது கருணாநிதியின் குடும்பத்தின் சொத்து விவகாரம் அரசியல் பூதாகாரமாக வெளிக்கிட்டபோது கலாநிதிமாறன் கருணாநிதி குடும்பத்துடன் இணைந்து கொண்டது அரசியலில் இதெல்லாம் சகஜமப்பா என்று நடிகர் கவுண்டமணி கூறுவதுபோல ஆகிவிட்டது.

இவற்றையெல்லாம் அப்படியே விட்டுவிடலாம். ஆனால் தயாநிதிமாறன் தேர்தல் காலம் வரும் வேளையில் ஈழத்தமிழர் பற்றிச் சிந்தித்தது, இளம் அரசியல்வாதியிடம் இத்துணை சுயநலக் குருதி ஓடுகிறதென்னும் உண்மை தெரியப்படுத்தியுள்ளது.

மத்திய அமைச்சராக இருந்தபோது, தற்போதைய அரசியல் செல்வாக்கு நிலையில் ஈழத்தமிழர் பற்றி இம்மியும் சிந்திக்காத தயாநிதி மாறன், தேர்தல் நெருங்கும்போது தி.மு.க. ஆட்சியில் இருந்தால்தான் இலங்கையில் அமைதியை ஏற்படுத்த முடியுமெனக் கூறியிருப்பது, அட! நல்ல மனிதர் என்று நினைத்தது பெரும் பிழையாயிற்று என எண்ண வைக்கிறது.

ஈழத்தமிழர்கள் துன்பப்படும்போது இந்திய மத்திய அரசை வலியுறுத்தி இலங்கையில் யுத்த நிறுத்தம் செய்விக்க முடியாத தி.மு.க. ஆட்சியில் இருப்பதால் எவ்வாறு இலங்கையில் அமைதியை ஏற்படுத்த முடியும் என தயாநிதிமாறன் கருதுகிறார் என்பது புரியாத விடயமே.

பிரணாப் முகர்ஜியை இலங்கைக்கு அனுப்புவேன். அங்கு அமைதியை ஏற்படுத்துவேன் என பிரதமர் மன்மோகன் சிங் தமிழக முதல்வர் கருணாநிதியிடம் தெரிவித்திருந்தார். ஆனால் முகர்ஜியின் இலங்கை விஜயம் உடனடியாக நடைபெறவில்லை.

மன்மோகன் சிங் நெஞ்சுவலியாலும், கருணாநிதி முதுகுவலியாலும் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தபோது பிரணாப் முகர்ஜி இலங்கைக்கு வந்து போனார்.

அவரின் வருகைக்குப் பின்னரே ஈழத்தமிழர் பலர் உயிரிழந்தனர். நிலைமை இவ்வாறாக இருக்கும்போது தயாநிதிமாறன் இப்படியொரு மாறாட்டக் கதையை கதைக்காமல் இருப்பதே நல்லது.

# மீளக் குடியமரும் முஸ்லிம் மக்களின் தேவைகள் குறித்து உரிய நடவடிக்கை

## அமைச்சர் டக்ளஸ் தெரிவிப்பு

யாழ்.குடாநாட்டில் தமிழ் மக்களும் முஸ்லிம் மக்களும் ஒன்றுடன் ஒன்று கலந்த உறவுகளாகவே வாழ்ந்து வந்திருந்தோம். எனினும் நாசகார செயற்பாடுகளால் இன்று முஸ்லிம் மக்கள் குடாநாட்டில் இருந்து இடம் பெயர்ந்த நிலையில் வாழவேண்டியிருப்பதாகவும் தற்போது யாழ்.குடாநாட்டில் வாழ்ந்து வருகின்ற முஸ்லிம் மக்களது தேவைகள் தொடர்பில் அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்வதாகவும் இங்கு மீளக்குடியமர வரும் முஸ்லிம் மக்களை அன்புடன் வரவேற்று, அவர்கள் குடியமர்வதற்கான சகல ஏற்பாடுகளையும் மேற்கொள்ளத் தான் தயாராக இருப்பதாகவும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் முஸ்லிம் வட்டாரத்தில் வசித்து வரும் முஸ்லிம் மக்கள் நேற்று முன்தினம் சமூக சேவைகள் மற்றும் சமூக நலத் துறை அமைச்சரும் வடமாகாணத்துக்கான விசேட செயலணியின் தலைவருமான டக்ளஸ் தேவானந்தாவை அமைச்சரின் யாழ்.அலுவலகத்தில் தங்களது தேவைகள் தொடர்பில் கலந்துரையாடிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இங்கு மேலும் கருத்து தெரிவித்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, யாழ்.குடாநாட்டில் மீளக் குடியமர வரும் மக்களை குடியமர்த்துவதற்காகவும் தற்போது சொந்த இருப்பிடங்கள் இன்றி இங்கு வாழ்ந்து வரும் முஸ்லிம் மக்களுக்கு இருப்பிட வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்கும் ஏற்பாடுகளை செய்ய இருப்பதாகவும் இதற்கான காணிகள் தொடர்பான விபரங்கள் அனைத்தையும் பிரதேச செயலாளர் வாரியாக திரட்டி வருவதாகவும் தெரிவித்ததுடன் யாழ்.குடாநாட்டில் முஸ்லிம் மக்கள்,நல்ல எதிர்கால எதிர்பார்ப்புகளுடன் நிம்மதியாக வாழும் காலம் உருவாகி உள்ளது என்றும் சொர்க்க வாசல் என குடாநாட்டுமக்களால் உணர்த்தப்பட்டு வரும் ஏ-9 தரைப்பாதை திறக்கப்பட்டதும்,குடாநாட்டின் தற்போதைய நிலைமை முழுமையாக மாறிவிடும் என்றும் தெரிவித்தார். (சு)

# 2 மாதங்களில் 27 தமிழர்கள் கொழும்பில் வைத்துக் கடத்தல்

கொழும்பிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் பெப்ரவரி மாதம் முதலாம் திகதியிலிருந்து நேற்றுவரை 8 தமிழர்கள் கடத்திச் செல்லப்பட்டுள்ளதாக கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கடந்த ஜனவரி மாதம் மட்டும் 19 பேர் கடத்திச்செல்லப்பட்டதாகவும் இந்த ஆண்டின் தொடக்கத்தில் இருந்து நேற்று வரை 27 இளைஞர்கள் கடத்தப்பட்டுள்ளனர் என்றும் முறையிடப்பட்டுள்ளது.

இது தொடர்பான முறைப்பாடுகள் உறவினர்கள் மூலம் பதியப்பட்டுள்ளதாக கொழும்பில் உள்ள இலங்கை மனித உரிமை ஆணைக்குழு அதிகாரிகள் கூறுகின்றனர்.

20 வயதுக்கும் 45 வயதுக்கும் இடைப்பட்டவர்களே கடத்திச் செல்லப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

வெள்ளை வானில் வரும் ஆயுதக்குழுக்கள் தம்மை பொலிஸார் என அடையாளப்படுத்தி மேலதிக விசாரணைக்கு வருமாறு கூறியே கடத்திச் செல்வதாக உறவினர்கள் முறைப்பாட்டில் குறிப்பிட்டுள்ளனர்.

இதேவேளையில், கடத்தல் தொடர்பான பல முறைப்பாடுகள் தனக்கும் கிடைத்துள்ளதாக பிரதி அமைச்சர் இராதா கிருஸ்ணன் தெரிவித்தார்.

# பெண் குழந்தையை விற்பனை செய்த தாயாரும்,உதவியவரும் விளக்கமறியலில்

(பருத்தித்துறை)

பிறந்து 6 நாட்களேயான பெண் குழந்தையொன்றை விற்பனை செய்த தாயாரையும், அதற்கு உடந்தையாக இருந்த சுகாதார திணைக்கள குடும்பநல உத்தி யோகத்தர் ஒருவரையும் விளக்கமறியலில் வைக்குமாறு பருத்தித்துறை நீதிபதி கே.அரிய நாயகம் உத்தரவிட்டுள்ளார்.

விற்பனை செய்யப்பட்டு நெல்லியடியில் பொலிசாரால் மீட்கப்பட்ட குழந்தையை வடம தய அரச சிறுவர் இல்லத்தில் நீதிமன்றத்தின் பாதுகாப்பில் வைக்குமாறும் அவர் உத்தரவிட்டார்.

வடமராட்சியை சேர்ந்த 17 வயதுடைய இளம் பெண் ஒருவர் கடந்த மாதம் 21 ஆம் திகதி பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்திய சாலையில் பெண் குழந்தை யொன்றை பிரசவித்தார்.அக் குழந்தை கடந்த மாதம் 27 ஆம் திகதி குடும்பநல உத்தியோகத்தர் ஒருவரின் உதவியுடன் பருத்தித்துறையில் விற்பனை செய்யப்பட்டுள்ளது. இக் குழந்தை விற்பனை சம்பந்தமாக நெல்லியடி பொலிஸாருக்கு தகவல்கள் கிடைத்திருந்தன. இக்குழந்தை விற்பனை தொடர்பான விசாரணைகளை முடுக்கிய நெல்லியடிப் பொலிசார் குழந்தையின் தாயையும் குழந்தை விற்பனைக்கு உடந்தையாக இருந்த குடும்பநல உத்தியோகத்தரையும் கைது செய்தனர்.

இது தொடர்பான விசாரணைகளை மேற் கொண்ட பொலிஸார் விற்பனை செய்த குழந்தையையும் மீட்டிருக்கின்றனர். குழந்தையின் தாயும் சம்பந்தப்பட்ட குடும்பநல உத்தியோகத்தரும் பொலிசாரினால் பருத்தித் துறை மாவட்ட நீதிபதி கே.அரியநாயகம் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டனர். இருவரையும் எதிர்வரும் 20 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிபதி உத்தரவிட்டார். (ச-14,52)

## விவாத மன்றமும் பரிசளிப்பு விழாவும்

(யாழ்ப்பாணம்)

யாழ்.இந்துக்கல்லூரி குமாரசுவாமி மண்ட பத்தில் இன்று புதன்கிழமை காலை 11 மணிக்கு விவாத மன்றமும் பரிசளிப்பு விழாவும் நடைபெறவுள்ளது.

இவ்விழாவில் பிரதம விருந்தினராக இரா.செல்வவடிவேல் கலந்து சிறப்பிப்பதுடன் சிறப்பு விருந்தினராக இலங்கை வங்கி மேற்தரக்கிளை முகாமையாளர் கே.பி.ஆனந்த நடேசன் கலந்து கொள்ளவுள்ளார். (இ)

## விழிப்புணர்வு கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக சித்த மருத்துவத் துறையினரால் ஆரோக்கியமான சமுதாயத்தை உருவாக்கும் நோக்கில் நடத்தப்பட்டு வரும் மூலிகை பற்றிய விழிப்புணர்வுக் கருத்தரங்கின் தொடர்ச்சியாக இன்று காலை 10.30 மணிக்கு சாவகச்சேரி,றிபேர்க் கல்லூரியில் மேற்படி விழிப்புணர்வுக் கருத்தரங்கு இடம்பெறும் என சித்த மருத்துவத் துறையின் சிரேஷ்ட விரிவுரையாளர் ச.விவியின் அறிவித்துள்ளார். (ச-14)

## இல்ல மெய்வல்லுநர் போட்டி

(பொன்னாலை)

சங்கரத்தை சின்னம்மா வித்தியாசாலையின் வருடாந்த மெய்வல்லுநர் போட்டி-2009 இன்று பிற்பகல் 1.30 மணிக்கு அதிபர் வெ.இராஜ்குமார் தலைமையில் நடைபெற வுள்ளது.

நிகழ்விற்கு பிரதம விருந்தினராக சங்கானை மக்கள் வங்கி முகாமையாளர் ந.துரை ராசாவும் சிறப்பு விருந்தினராக நா.சிவசுப்பிர மணியமும் கலந்து கொள்ளவுள்ளனர். (ச-14,49)

## இசைப்பாடகர் இசையரசன் சாவு

விடுதலைப் புலிகளின் ஒளிப்பட ஆவணப்படுத்தலை மேற்கொண்டு வந்த விடுதலைப் புலிகளின் செந்தோழன் உயிர் பிழந்துள்ளார்.

ஒளிப்படக் கலைப் போராளியும், பாடலாசிரியருமான இவர் விடுதலைப்புலிகளின் ஒளிப்பட ஆவணப்படுத்தலை செய்து வந்தவர்.

இதேவேளை, பாடகர் இசையரசன் உயிரிழந்துள்ளார். அறுபதுக்கும் அதிகமான இசைப்பாடல்களை பாடியுள்ள இவர், பாடகர் சாந்தனின் மகன் ஆவார். (ச-5)

## சுவாமி விவேகானந்தரின் ஆளுமை வளர்ச்சி

### இலட்சியத்தையே குறிக்கோளாகக் கொள்



ஒரு இலட்சியத்தை எடுத்துக்கொள்ளுங்கள் அதையே உங்கள் வாழ்க்கையாகக்கொள்ளுங்கள். அதையே நினையுங்கள், அதையே கனவு காணுங்கள், அந்த இலட்சியத்திற்காகவே வாழுங்கள், மூளை, தசைகள்,நரம்புகள் என்று உங்கள் உடலின் ஒவ்வொரு பகுதியும் அந்த இலட்சியத்தால் நிறையட்டும்.பிற கருத்துக்கள் அனைத்தையும் அடியோடு விட்டுவிடுங்கள். வெற்றிக்கு வழி இதுவே. ஆன்மீக செம்மல்கள் உருவாக்கப்பட்ட வழி இதுவே மற்றுள்ளவர்கள் வெறும் பேச்சு எந்திரங்கள் மட்டுமே.

## தப்பிச் செல்ல முயன்ற தமிழ் இளைஞர் சுட்டுக்கொலை

கொழும்பில் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட தமிழ் இளைஞர் ஒருவர் கடந்த ஞாயிற்றுக்கிழமை காலை விசாரணைக்காக அழைத்துச் செல்லும் வழியில் புறக்கோட்டை டாம் வீதியில் வைத்து தப்பிச் செல்ல முயன்ற போது பொலிஸாரால் சுட்டுக் கொல்லப்பட்டதாக பொலிஸ் பேச்சாளர் ரஞ்சித் குணசேகர தெரிவித்தார்.

இது பற்றி மேலும் தெரிவிக்கையில்,

விடுதலைப்புலி என்ற சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டிருந்த மேற்படி தமிழ் இளைஞர் கடந்த ஞாயிற்றுக்கிழமை கைவி விடப்பட்ட நிலையில் பொலிஸ் நிலையத்துக்கு கொண்டு செல்லப்பட்டுக் கொண்டிருந்தபோது புறக்கோட்டை டாம் வீதியில் வைத்து அந்த சந்தேக நபர் ஜீப்பை செலுத்திக் கொண்டிருந்த உதவிப் பொலிஸ் அதிகாரியின் கழுத்தை நெரித்துள்ளார். இதனால் ஜீப் அப்பகுதியில் குடை சாய்ந்துள்ளது.

அந்த வேளையில் சந்தேக நபர் தப்பியோட முனைந்த போது பாதுகாப்பாக வந்த பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் நபர் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்ட போது சந்தேக நபர் அவ்விடத்திலேயே கொல்லப்பட்டார். (ஓ)

# சர்வகட்சி குழுவின் தீர்வுத்திட்டம் மாத இறுதியில் கையளிக்கப்படும்

## அமைச்சர் திஸ்ஸ விதாரண தகவல்



(கொழும்பு)

சர்வகட்சி பிரதிநிதிகள் குழுவின் தீர்வு யோசனையை இம்மாத இறுதியில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் கையளிப்பதற்கு எதிர்பார்ப்பதாக அதன் தலைவரும் அமைச்சருமான பேராசிரியர் திஸ்ஸ விதாரண தெரிவித்தார்.

சர்வகட்சி பிரதிநிதிகள் குழு தயாரித்துள்ள தீர்வுத்திட்டத்தில் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையிலும் மாற்றம் செய்வதற்கான யோசனைகளும் முன் வைக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் கூறினார்.

இவ்விடயம் தொடர்பில் அவர் மேலும் கூறியதாவது,

இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வை தயாரிப்பதற்காக நியமிக்கப்பட்ட சர்வகட்சி பிரதி நிதிகள் குழு அரசியல் தீர்வுத்திட்டத்தை பெரும்பாலும் முடித்துவிட்டது எனக் கூறலாம். எனினும் சில விடயங்களில் இதுவரை இணக்கம் காணப்படவேண்டியுள்ளது.

இந்நிலையில் இம்மாத இறுதியில் அரசியல் தீர்வு யோசனையை ஜனாதிபதியிடம் கையளிக்க முடியும் என எதிர்பார்க்கின்றோம். இது நான் தனிப்பட்ட ரீதியில் தயாரிக்கும் யோசனை அல்ல. அப்படியானால் திகதியிட்டு கூறுவேன்.

ஆனால் இது 13 அரசியல் கட்சிகள் இணைந்து தயாரிக்கும் அரசியல் தீர்வுத்திட்டம் எனவே தடங்கல் தாமதங்கள் ஏற்படலாம்.

இந்நிலையில் தயாரிக்கப்பட்டுவரும் தீர்வுத் திட்டத்தில் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையிலும் மாற்றம் செய்வதற்கான யோசனைகளும் முன் வைக்கப்பட்டுள்ளன.

இதேவேளை சர்வகட்சி பிரதிநிதிகள் குழுவின் கூட்டங்களில் கலந்துகொண்டு கருத்துக் களையும் யோசனைகளையும் முன் வைக்குமாறு தமிழ்த்தேசிய கூட்டமைப்பு ஐக்கிய தேசிய கட்சி மற்றும் மக்கள் விடுதலை முன்னணி ஆகிய கட்சிகளுக்கு அழைப்பு விடுத்து வருகின்றோம். ஆனால் குறிப்பிட்ட கட்சிகள் கூட்டங்களில் கலந்து கொள்ளாமல் தவிர்த்து வருகின்றன.

இறுதி சந்தர்ப்பத்திலும் இந்த மூன்று கட்சிகளும் எமது கூட்டங்களில் கலந்து கொள்ளும் என எதிர்பார்க்கின்றோம். ஒரு வேளை இந்த கட்சிகள் இறுதிவரை எமது கூட்டங்களில் கலந்துகொண்டு யோசனை களை முன்வைக்காவிடின் இருக்கின்ற அரசியல் கட்சிகளின் யோசனைகளைக் கொண்டு தயாரிக்கப்படும் தீர்வுத்திட்டத்தை ஜனாதிபதியிடம் கையளிப்பதைவிட வேறு வழி எமக்கு இல்லை.

கட்சிகளுக்கு அழைப்பு விடுக்க மட்டுமே முடியும் மாறாக இழுத்துக் கொண்டு வந்து கூட்டங்களில் பங்குபற்ற வைக்க முடியாது இதனை அனைவரும் உணர வேண்டும். (ஓ-5)

## விசுவமடுத் தாக்குதலுக்கு கண்டனம் தெரிவிக்கும் அமெரிக்கா பொதுமக்கள் கொல்லப்பட்டமைக்கு கண்டனம் தெரிவிக்காதது ஏன்?

## செல்வம் அடைக்கலநாதன் கேள்வி

இலங்கை அரசாங்கத்தின் கட்டுப்பாட்டில் உள்ள விசுவமடு பகுதியில் நேற்று முன் தினம் நடைபெற்ற குண்டுத் தாக்குதலுக்கு உடனடியாக கண்டனம் தெரிவித்துள்ள அமெரிக்கா வன்னியில் இலங்கை படையினர் நடத்திய பல்வேறு தாக்குதல்களில் 500க்கும் அதிகமான பொதுமக்கள் கொல்லப்பட்டும் 500க்கும் அதிகமானோர் காயப்பட்ட போதும் கண்ட னம் தெரிவிக்காதது ஏன் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி நாடாளு மன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் கேள்வி எழுப்பியுள்ளதுடன் குற்றஞ் சாட்டியுள்ளார்.

இலங்கைப் படையினரின் கட்டுப்பாட்டில் உள்ள விசுவமடு பகுதியில் நடத்தப்பட்ட தாக்குதலின் உண்மை நிலைமை என்னவென்று யாருக்கும் தெரியாது. அத்துடன் அப்பிரதேசத்தில் போர் தீவிரமாக நடை பெறுகின்றது. இந் நிலையில் இலங்கை அரசாங்கமும் அதன் படைத்தரப்பும் கூறுகின்ற கதைகளை கேட்டு எப்படி கண்டனம் தெரிவிக்க முடியும் எனவும் செல்வம் அடைக்கலநாதன் கொழும்பில் உள்ள அமெரிக்க தூதுவரிடம் கேள்வி எழுப்பியுள்ளார்.

பொதுமக்கள் மீது தாக்குதல் நடத்த வேண்டாம் என்று விடுதலைப்புலிகளிடம் வேண்டுகோள் விடுத்து கண்டனம் தெரிவித்த கொழும்பில் உள்ள அமெரிக்கத் தூதுவரின் அறிக்கை தொடர்பாக கருத்து வெளியிட்ட போதே நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் இவ்வாறு தெரிவித்துள் ளார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

விசுவமடு பகுதியில் கடந்த திங்கட்கிழமை நடைபெற்ற குண்டுத்தாக்குதலில் படையினர் பலர் கொல்லப்பட்டும் காயமடைந்தும் உள்ளனர். அத்துடன் அங்கு நின்ற பொது மக்களில் பலர் கொல்லப்பட்டும் காயமடைந்தும் உள்ளனர். இவை படையினர் கூறிய தகவல்கள்தான்.

உண்மையில் அங்கு எப்படி குண்டு வெடித்தது என்பது குறித்து எவருக்கும் தெரியாது எவ்வாறாயினும் படையினருடன் பொதுமக்களும் அங்கு கொல்லப்பட்டிருக்கின்றனர் என்பது தெரிகின்றது. அதனையிட்டு நாங்களும் வருத்தமடைகின்றோம்.

ஆனாலும் இக்குண்டு வெடிப்பு நடைபெற்றது பொதுமக்கள் அதற்குள் எப்படி சிக்கிக்கொண்டனர். என்பதை அறிவதற்கு முன்னர் படையினர் கூறுவதனை கேட்டு விட்டு அமெரிக்க தூதுவர் கண்டன அறிக்கை வெளியிட்டிருப்பது வேடிக்கையானது.

அங்கு நின்ற பொதுமக்கள் கொல்லப்பட்டது அமெரிக்கத் தூதுவருக்கு வேதனையாக இருந்திருக்குமானால் வன்னியில் படையினரின் எறிகணை மற்றும் பீரங்கித் தாக்குதல்களில் ஒவ்வொரு நாளும் 50, 60 பொது மக்கள் கொல்லப்படுகின்றனர். நூற்றுக்கும் அதிகமானோர் காயமடைகின்றனர் . இது அவருக்கு வேதனையாக தெரியவில்லையா?

அரசாங்கம் எப்படியான பயங்கரவாத நடவடிக்கையில் ஈடுபட்டாலும் அதனை ஜனநாயகமாக பார்க்கும் அமெரிக்கா போன்ற வல்லரசுகள் எப்போதும் தங்கள் நலன்களை கருத்தில் கொண்டுதான் அறிக்கை விடுவார்கள் என்பது எங்களுக்கு தெரியும்.

இருந்தாலும் தமிழர் விவகாரத்தில் அமெரிக்கா போன்ற வல்லரசுகளின் நட வடிக்கையில் எமக்கு சந்தேகம் ஏற்பட்டுள்ளது என்றார். (ஓ -5)

## சிவராத்திரி பூசை குறித்தும் ஒலிபெருக்கி பாவனை தொடர்பாகவும் பொலிஸாரின் அனுமதி பெறவேண்டும்

### இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம் அறிக்கை

சிவராத்திரி விசேட பூசைகள் மேற் கொள்ளும் ஆலய பரிபாலன சபையினர் தத்தமது பிரதேசங்களில் உள்ள பொலிஸ் நிலையங்களுக்கு பூசை தொடர்பாகவும் ஒலி பெருக்கி பாவனை குறித்தும் அறிவித்து உரிய அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண் டும் என்று இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இது குறித்து திணைக்களம் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம், மகா சிவராத்திரி விரதத்தின் முக்கியத்துவத்தைப் பற்றியும் அன்றைய தினம் முழு இரவும் இந்து ஆலயங்களில் குறிப்பாக சிவன் ஆலயங்களில் பூசை வழிபாடுகள் மேற்கொள்ளப்படும் எனவும் இதன் பொருட்டு பெருந்திரளான பக்தர்கள் ஆல யங்களில் ஒன்று சேர்வார்கள் என்றும் மத அலுவல்கள் ஒழுக்க மேம்பாட்டு அமைச்சின் செயலாளருக்கு அறிவித்ததோடு அன்றைய தினம் பக்தர்கள் இரவு வேளைகளில் தமது வழிபாட்டுக் கடமைகளை மேற்கொள்ள சுதந்திரமாக நட மாடுவதற்கு உரிய அனுமதி அவசியம் எனவும் வேண்டுகோள் விடுத்திருந் தது.

மத அலுவல்கள் ஒழுக்க மேம்பாட்டின் செயலாளர் இவ்விடயத்தை பாதுகாப்பு அமைச்சின் செயலாளருக்கு அறிவித்ததைத் தொடர்ந்து இம் மாதம் 23ஆம் திகதி திங்கட்கிழமை அனுஷ்டிக்கப்படவுள்ள மகா சிவராத்திரி விரதத்தை ஆலயங்களில் ஆறு காலப் பூசைகளோடு அனுஷ்டிப்பதற்கு பாதுகாப்புத் தரப்பு பூரண ஒத்துழைப்பு வழங் கும் என பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் மத அலுவல்கள் ஒழுக்க மேம்பாட்டின் அமைச்சின் செயலாளருக்கு அறிவித்துள்ளார்.

எனவே சிவராத்திரி விசேட பூசைகளை மேற்கொள்கின்ற ஆலய பரிபாலன சபையினர் தத்தம் பிரதேசங்களில் உள்ள பொலிஸ் நிலையங்களுக்கு பூசை தொடர்பா கவும் ஒலி பெருக்கி பாவனை தொடர்பாகவும் அறிவித்து உரிய அனுமதியைப் பெற்றுக்கொள்ளுமாறு இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் வேண்டிக்கொள்கின்றது. உரிய கால அவகாசத்துடன் இவ் அனு மதியை பெற்றுக்கொள்ள நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு திணைக்களம் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஓ-5)


43ஆவது பிறந்த நாள் பிரார்த்தனையும்
உள்ளம் விட்டகலாத 284 ஆவது நினைவு தினமும்
அமரர் திருமதி சசிகலா (மீனா) விஸ்வலிங்கம்



நுணாவில் மேற்கு
மடத்தடி, சாவகச்சேரி.

| மலர்வு | உதிர்வு |
| --- | --- |
| 11 | 28 |
| 02 | 04 |
| 1966 | 2008 |

மல்லிகை மலர் மணம் வீச மறந்ததேன்?
மாளிகையும் செயலிழந்து போனது மேன்?
சங்கீதப்பாடலும் கசந்தது மேன்?
இங்கிதமாயிருந்த முகம் வாடியது மேன்?
இதயத்து விணையும் ஒலியிழந்தது மேன்?
அன்புடனே உன் வாசல் வந்தவர்களை
வரவேற்று உபசரிக்கும் நீயில்லாமல்
பொலிவிழந்து போயிற்றே! என் செய்வோம்?
விளைவேலி மருதடிப்பிள்ளையார்
அருளாசி என்றென்றும் உனக்கிருக்கும்
எத்தனை ஆண்டு போனாலும் உன் அழகுமுகம்
எம் நெஞ்சத்தை விட்டு நீங்கவே நீங்காது!

உன் ஆத்மா சாந்தி பெற
ஆண்டவனை பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி

ஆருயிர்க் கணவர்
மற்றும்
பத்மராசா குடும்பத்தினர் (மைத்துனர்)
பத்மராணி குடும்பத்தினர் (மைத்துனி)

(2242)

# பதான் சகோதரர்கள் கலக்கல் இந்திய அணி திரில் வெற்றி

(கொழும்பு)

பதான் சகோதரர்களின் சகலதுறை ஆட்டத்தின் மூலம் இந்திய அணி இருபது-20 போட்டியில் 3 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் இலங்கை அணியை வீழ்த்தியது.

இதன்மூலம் சொந்த மண்ணில் முதன் முறையாக நடந்த இருபது-20 போட்டியில் இலங்கை அணி தோல்வியைச் சந்தித்தது.

இலங்கைக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இந்திய அணி 5 ஒருநாள், ஒரு இருபது-20 போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடியது.

இதில் ஒருநாள் தொடரை இந்திய அணி 4:1 என்ற கணக்கில் கைப்பற்றிய நிலையில் இருபது-20 போட்டி நேற்று கொழும்பில் நடைபெற்றது.

இப் போட்டி இலங்கையில் நடைபெறும் முதலாவது சர்வதேச இருபது-20 போட்டி என்பது விஷேட அம்சமாகும்.

இதில் நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணித் தலைவர் டில்சானின் அதிரடியான அரைசதத்தின் மூலம் 20 ஓவர் கள் நிறைவில் 4 விக்கெட்டுக்களையிழந்து 171 ஓட்டங்களை குவித்தது.

இதில் அணித்தலைவர் திலகரட்ண டில்சான் 47 பந்துகளில் (7 பவுண்டரிகள்,ஒரு சிக்ஸர் அடங்கலாக) 61 ஓட்டங்களையும் சனத் ஜெயசூரிய 17 பந்துகளில் (3 பவுண்டரிகள், 2 சிக்ஸர்கள் அடங்கலாக) 33 ஓட்டங்களையும் ஆட்டமிழக்காமல் சாமர சில்வா 21, வீரரட்ண 10 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் யூசுப் பதான் 4 ஓவர்கள் பந்துவீசி 23 ஓட்டங்கள் மாத்திரம் கொடுத்து 2 விக்கெட்டுக்களையும் இர்பான் பதான், இஷாந் சர்மா ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு 20 ஓவர்களில் 172 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி 15.1 ஓவர்களில் 115 ஓட்டங்களை மாத்திரமெடுத்து 7 விக்கெட்டுக்களையிழந்து திணறியது.

எனினும் 8ஆவது விக்கெட்டுக்காக இணைந்த பதான் சகோதரர்களின் அதிரடியான இணைப்பாட்டத்தின் மூலம் 19.2 ஓவர்களில் 7 விக்கெட்டுக்களையிழந்து 174 ஓட்டங்களை எடுத்து 3 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் வெற்றியடைந்தது.




இதில் இர்பான் பதான் 16 பந்துகளில் (2 பவுண்டரிகள்,2 சிக்ஸர்கள் அடங்கலாக) 33 ஓட்டங்களையும் யூசுப் பதான் 10 பந்துகளில் (ஒரு பவுண்டரி,2 சிக்ஸர் அடங்கலாக 22 ஓட்டங்களை ஆட்டமிழக்காமல் எடுத்ததுடன் ரெய்னா 27 பந்துகளில் (5 பவுண்டரிகள், ஒரு சிக்ஸர் அடங்கலாக) 35 ஓட்டங்களையும் யுவராஜ் சிங் 21 பந்துகளில் (3 பவுண்டரிகள், 2 சிக்ஸர்கள் அடங்கலாக) 32 ஓட்டங்களையும் குவித்தனர்.

பந்துவீச்சில் மலிங்க பண்டார 3 விக்கெட்டுக்களையும் துஷார,முபாரக் மற்றும் ஜெயசூரிய ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

இப் போட்டியில் இந்திய அணியின் வெற்றிக்கு திருப்பு முனையமைத்த யூசுப் பதான் ஆட்டநாயகனாக தெரிவானார்.

இவ் வெற்றியின் மூலம் இலங்கை மண்ணில் நடந்த முதலாவது இருபது-20 போட்டியில் இந்திய அணி கோப்பையை வென்றது.

**சகோதரர்கள் தினம்**

ஹசி சகோதரர்களின் சிறப்பான இணைப்பாட்டத்தின் மூலம் அவுஸ்திரேலிய அணி வெற்றிபெற்ற நிலையில் அதேதினத்தில் பதான் சகோதரர்களின் சிறப்பான ஆட்டத்தில் இந்தியா வெற்றிபெற்றது.

# ஹசி சகோதரர்கள் அசத்தல்; அவுஸ்திரேலிய அணி வெற்றி

## தொடரையும் சமன் செய்தது

(அடிலெய்ட்)

ஹசி சகோதரர்களின் அசத்தலான துடுப்பாட்டத்தின் மூலம் அவுஸ்திரேலிய அணி நான்காவது ஒருநாள் போட்டியில் 6 விக் கெட்டுக்கள் வித்தியாசத்தில் நியூசிலாந்து அணியை வீழ்த்தி தொடரை சமன் செய்தது.

அவுஸ்திரேலியாவுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள நியூசிலாந்து அணி சப்பல்-ஹாட்லி கிண்ணத்திற்கான 5 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் விளையாடுகின்றது.

இதில் முதலிரண்டு போட்டிகளில் நியூசிலாந்து அணியும் மூன்றாவது போட்டியில் அவுஸ்திரேலிய அணியும் வெற்றி பெற்றது.

இதன் மூலம் நியூசிலாந்து அணி தொடரில் 2:1 என்ற கணக்கில் முன்னிலையிலிருந்த நிலையில் நான்காவது போட்டி நேற்று அடிலெய்ட்டில் நடைபெற்றது.




இப்போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து அணி ரெய்லரின் சிறப்பான துடுப்பாட்டத்தின் மூலம் 50 ஓவர்கள் நிறைவில் 8 விக்கெட்டுக்களையிழந்து 244 ஓட்டங்களை எடுத்தது.

இதில் ரெய்லர் 71 பந்துகளில் (6 பவுண்டரிகள்,2 சிக்ஸர்கள் அடங்கலாக) 76 ஓட்டங்களையும் குப்தில் 45,மக்குலம் 33 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் ஜோன்சன் 3 விக்கெட்டுக்களையும் ஹோப்ஸ் 2 விக்கெட்டுக்களையும் பிறக்கன்,ஹில் பென் ஹயூஸ் மற்றும் மைக்கெல் கிளார்க் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் சாய்த்தனர்.

பதிலுக்கு 50 ஓவர்களில் 245 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலிய அணி ஹசி சகோதரர்களின் சிறப்பான இணைப்பாட்டத்தின் மூலம் 48.2 ஓவர்களில் 4 விக்கெட்டுக்களை மாத்திரமிழந்து 247 ஓட்டங்களை எடுத்து 6 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.


இதில் டேவிட் ஹசி 96 பந்துகளில் (6 பவுண்டரிகள் அடங்கலாக) 76 ஓட்டங்களையும் மைக்கெல் ஹசி ஆட்டமிழக்காமல் 71 பந்துகளில் (4 பவுண்டரிகள்,2 சிக்ஸர்கள் அடங்கலாக) 75 ஓட்டங்களையும் ஹடின்43 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் ஓ பிறின் 2 விக்கெட்டுக்களையும் சௌத்தி ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர். இவ்வெற்றியின் மூலம் 5 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரை 2:2 என்றகணக்கில் சமப்படுத்தியது.

இப்போட்டியில் அவுஸ்திரேலிய அணியின் வெற்றிக்கு திருப்பு முனையமைத்த டேவிட் ஹசி ஆட்ட நாயனாகத் தெரிவானார்.

# சுழல் நாயகன் முரளியின் சாதனைப் பயணம்... 04





1990/1991ஆண்டு காலப்பகுதியில் பாடசாலை மட்ட கிரிக்கெட் போட்டித் தொடரில் 100 விக்கெட்டுக்களுக்கு மேல் கைப்பற்றிய முரளிதரன் **'Bata School boy Cricketer of the Year'** என்ற விருதை சண்டே ஒப்சேவர் தலைமை அதிகாரியிடமிருந்து பெற்றபோது.

கண்டி சென் அன்ரனிஸ் கல்லூரி அணியில் 4 ஆண்டுகள் விளையாடிய முரளிதரன் இறுதி இரண்டு 1990/1991 பருவகாலப் பகுதியில் நூறுக்கு மேற்பட்ட விக்கெட்டுக்களை சாய்த்து 'Bata School boy Cricketer of the Year' என்ற விருதை வென்றார்.

தொடர்ந்து 1991ஆம் ஆண்டில் தமிழ் யூனியன் அணியில் சேர்த்துக் கொள்ளப்பட்ட முரளிதரன்இலங்கை கிரிக்கெட் 'ஏ' அணியிலும் தெரிவு செய்யப்பட்டு இங்கிலாந்துக்கான சுற்றுப்பயணத்தில் பங்கேற்றார்.

இலங்கை 'ஏ' அணியின் இங்கிலாந்து சுற்றுப்பயணத்தில் 5 போட்டிகளில் விளையாடிய முரளிதரன் ஒரு விக்கெட்டை மாத்திரம் வீழ்த்தி சோபிக்கத் தவறினார்.

முரளிதரனின் பொதுவாக வேகம் குறைந்த திரும்பங் கொண்ட (Slow turn) பந்துவீச்சு என்பதால் இங்கிலாந்து மைதானங்களில் எடுபடவில்லை.


**பாலா**

இதனால் 19ஆவது வயதில் தனது வியாபார நடவடிக்கைகளில் ஆர்வம் செலுத்திய முரளிதரன் அதில் ஈடுபட்டார். இந்நிலையில் 1992ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் இலங்கைக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்ட அலன் போர்டர் தலைமையிலான அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணி 3 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடியது.

இத் தொடரில் அர்ஜுன ரணதுங்கா தலைமையிலான இலங்கை கிரிக்கெட் அணிக்கு முரளிதரன் முதன் முறை யாக தேர்வு செய்யப்பட்டார்.

(பயணிக்கும்)

# எண் விளையாட்டு- 09




***போட்டிவிதிகள்:*** மேலிருந்து கீழ் தொடங்கும் வெள்ளைக் கட்டங்களில் நிரப்பப்படும் எண்களின் கூட்டுத் தொகை, கட்டங்களின் மேல்புறத்தில் கொடுக்கப்பட்டுள்ள எண்ணுக்கு சமமாக வர வேண்டும்.

இடமிருந்து வலமாக செல்லும் கட்டங்களுக்கும் இதே விதிதான். அக்கட்டங்களுக்கான கூட்டுத் தொகை இடப்புறம் கொடுக்கப்பட்டுள்ளது.

1 முதல் 9 வரையான எண்களை பயன்படுத்த வேண்டும். ஆனால் ஒரு வரிசையில் பயன்படுத்திய எண் திரும்ப வரக்கூடாது.

நேற்றைய பகுதிக்கான விடை



மாநகர சபை, யாழ்ப்பாணம்.



# இலங்கைத் தமிழர் மறுவாழ்வுக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும்

## பிரெஞ்சு பாதுகாப்பு அமைச்சர்

(புதுச்சேரி)

இலங்கையில் உள்நாட்டுப் போரில் பாதிக்கப்பட்டுள்ள தமிழர்களின் மறுவாழ்வுக்கு அந்நாட்டு அரசு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும் என்று பிரெஞ்சு நாட்டின் பாதுகாப்புத்துறை இணை அமைச்சர் மரியே போக்கல் கூறியுள்ளார்.

புதுச்சேரியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், இலங்கையில் தமிழர்களின் மறுவாழ்வுக்கு அங்குள்ள அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

தீவிரவாதத்தை பிரான்ஸ் ஆதரிக்கவில்லை. இலங்கையில் நிலவும் பிரச்சினைக்கு பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காணவேண்டும்.

இலங்கையில் ஒருமைப்பாடு நிலைநாட்ட வேண்டுமென்பதில் பிரெஞ்சு அரசு அக்கறையாக இருக்கின்றது. (ச-5)

## பொதுமக்கள் மீது...

பிரிகேடியர் உதயநாணயக்கார தெரிவித்துள்ளார்.

எனினும் இந்தத்தாக்குதல் குறித்து விடுதலைப்புலிகள் தரப்பிலிருந்து கருத்துக்கள் எதுவும் உடனடியாக வெளியாகவில்லை. விடுதலைப்புலிகளின் பிரதேசங்கள் பலவற்றை இராணுவத்தினர் கைப்பற்றி முன்னேறிச் செல்லும் வேளையில் போர் பிரதேசத்திலிருந்து பொதுமக்கள் இராணுவக்கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்குள் வருவதை தடுப்பதற்காகவே இந்த துப்பாக்கிச் சூட்டுத் தாக்குதலை விடுதலைப்புலிகள் நடத்தியிருப்பதாகவும் இராணுவப் பேச்சாளர் குற்றம் சுமத்தியிருக்கின்றார்.

இந்தச் சம்பவத்தில் கொல்லப்பட்டவர்களின் சடலங்களையும் காயமடைந்தவர்களையும் வவுனியா மற்றும் அனுராதபுரம் மருத்துவமனைகளுக்கு கொண்டு செல்வதற்கான நடவடிக்கைகளை இராணுவத்தினர் மேற்கொண்டிருந்ததாகப் பாதுகாப்பு அமைச்சகம் தெரிவித்திருக்கின்றது.

இதற்கிடையில் உடையார் கட்டுக்குளம் பிரதேசத்தில் இராணுவத்தினரிடம் 1046 சிவிலியன்கள் வந்து சேர்ந்திருப்பதாகவும் பாதுகாப்பு அமைச்சகம் தெரிவித்திருக்கின்றது. இதேவேளை விசுவமடுப் பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற தற்கொலை குண்டுத் தாக்குதல் சம்பவத்தில் கொல்லப்பட்டதாகத் தெரி விக்கப்படும் 10 சடலங்களையும் 29 காயமடைந்தவர்களையும் இராணுவத்தினர் வவுனியா மருத்துவ மனையில் ஒப்படைத்திருக்கின்றார்கள்.

இறந்தவர்களில் மூவர் ஆண்கள் என்றும் ஏனையோர் (4 வயது மதிக்கத்தக்க குழந்தை உட்பட) 7பேர் பெண்கள் என்றும் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது. (ச-5,14)

## இலங்கை நிலைமை...

அகப்பட்டுள்ளதுமாக இலங்கையில் ஏற்பட்டுள்ள மனிதாபிமான நெருக்கடி குறித்து தாம் ஆழ்ந்த கவலையை வெளியிடுவதாக மேற்படி அறிக்கையில் அவர்கள் தெரிவித்துள்ளனர். இலங்கை அரசாங்கமும் விடுதலைப் புலிகளும் சர்வதேச மனிதாபிமானச் சட்டங்களை மதித்து நடக்க வேண்டும் என்று தாம் மீள வலியுறுத்துவதாகவும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. படுகாயமடைந்தவர்களையும் நோயுற்றவர்களையும் அப்பகுதியிலிருந்து வெளியேற்றவும் அவர்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகள் கிடைக்கவும் அவர்களை போர் நடைபெறும் இடங்களில் இருந்து வெளியேற்றவும் தற்காலிகமான போர் நிறுத்தக்காலம் ஒன்று அவசியம் எனவும் அது தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

போர் நடைபெறும் பகுதியிலிருந்து படுகாயமடைந்தவர்களையும் நோயுற்றவர்களையும் அங்கிருந்து வெளியேற்றுவதற்கும் போர் நடைபெறும் பகுதிகளுக்கு மனிதாபிமான உதவிகள் வழங்கப்படுவதற்கும் தற்காலிக போர் நிறுத்தக் காலப்பகுதி அவசியமானது. மக்கள் போர் பிராந்தியத்திலிருந்து வெளியேற அனுமதிக்கப்பட வேண்டும் என்பதோடு கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ள அப்பகுதியில் உள்ள மக்களுக்கு மனிதாபிமான உதவிகள் கிடைக்க ஏற்பாடு செய்ய வேண்டும். அத்தோடு சர்வதேச செஞ்சிலுவைச்சங்கம் மற்றும் ஐக்கிய நாடுகள் என்பவற்றில் பணிபுரியும் மருத்துவப் பணியாளர்கள் உட்பட ஏனையோரின் பாதுகாப்பு உத்தரவாதப்படுத்தப்பட வேண்டும்.

இதேவேளை படையினருக்கும் விடுதலைப்புலிகளுக்குமிடையில் இடம் பெற்று வரும் மோதல்கள் காரணமாக சுமார் 2 இலட்சத்து 50 ஆயிரம் சிவிலியன்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக அயர்லாந்தின் வெளி விவகார அமைச்சர் மைக்கல் மார்டீன் தெரிவித்துள்ளார். (ச-5)

## ஐ.நாவின் சுயாதீன

தொடர்ந்தும் வன்முறைகளில் ஈடுபட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மனித உரிமை பாதுகாவலர்களுக்குப் பெரும் அச்சுறுத்தல் காணப்படும் மோசமான சூழ்நிலை இலங்கையில் காணப்படுவதாக சுயாதீன பிரதிநிதிகள் குழு தெரிவித்துள்ளது.

மனித உரிமை மீறல், ஊழல் மோசடி, படுகொலைகள், கடத்தல்கள் உள்ளிட்ட பல்வேறு வன்முறைச் சம்பவங்கள் இங்கு இடம்பெற்றுவருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஊடகங்கள் மீது கடுமையான நடைமுறைகள் பின்பற்றப்பட்டு வருவதாகவும் இதன் மூலம் ஜனநாயக உரிமை மீறப்படுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

மனிதாபிமான தேவை நிலவும் பகுதிகளுக்குச் சுதந்திரமாக செல்ல முடியாத நிலையினால் பாதிக்கப்பட்ட மக்கள் பேரவலத்தை எதிர்நோக்கியுள்ளதாகவும் குறிப்பிடப்படுகிறது. (ச-5)

## பயணிகள்...

நிறுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

நோயாளர்களை ஏற்றும்பணி நிறைவடைந்த பின்னரே இச்சேவை மேற்கொள்ளப்படும் எனவும் அவர் கூறினார். (ச-5)

## சர்வதேச செஞ்சிலுவைச்...

காரர்கள் தாங்கியிருந்தனர்.

சிறப்பாக இந்தியாவுக்கும் சீனாவுக்கும் இலங்கை மக்களின் நன்றிகள் உரித்தாகட்டும் என்றும் அவ்வாறு ஐரோப்பிய ஒன்றியம், பிரித்தானியா, அமெரிக்கா ஆகிய நாடுகளும் உதவி புரிய வேண்டும் எனவும் ஆர்ப்பாட்டக்காரர்கள் கோரிக்கை விடுத்தனர்.

தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டம் கொழும்பு பௌத்தாலோக மாவத்தையில் உள்ள பிரித்தானிய தூதரகத்திற்கு முன்பாக நேற்று செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு நடைபெற்றது.

முற்பகல் 11 மணிவரை நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் தலைவர் குணதாச அமரசேகர தலைமை தாங்கினார். நூற்றுக்கணக்கானோர் கலந்து கொண்ட ஆர்ப்பாட்டத்தில் பெருமளவிலான பௌத்த குருமாரும் கலந்து கொண்டனர்.

மகிந்த அரசாங்கத்தின் போர் நடவடிக்கைக்கு அமெரிக்கா, பிரித்தானியா போன்ற நாடுகள் இடையூறு விளைவிக்கின்றன.

விடுதலைப்புலிகளுக்கு ஆதரவாக போர் நிறுத்தம் செய்யுமாறு வற்புறுத்துகின்றனர். இதனை இலங்கை மக்கள் ஒருபோதும் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள் என்று ஆர்ப்பாட்டக்காரர்கள் முழக்கம் எழுப்பினர்.

அமெரிக்காவும் பிரித்தானியாவும் இரட்டை வேடம் போடுவதாகவும் குற்றம் சாட்டினர். அந்த நாடுகளின் பிரதிநிதிகளை கிண்டல் செய் யும் கேலிச் சித்திரங்களையும் ஆர்ப்பாட்டக்காரர்கள் தாங்கியிருந்தனர்.

சிறப்பாக அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்சர் கிளாரி கிளிங்டனை விடுதலைப் புலிகளின் உடையில் சித்திரிக்கும் கேலி சித்திரங்களை ஆர்ப்பாட்டக்காரர்கள் தாங்கியிருந்தனர். கிளாரி கிளிங்டன் இரட்டை வேடம் போடுகின்றார் என்றும் உரக்க முழக்கமிட்டனர்.

அதேவேளை, அனைத்துலக செஞ்சிலுவைச் சங்கம் விடுதலைப் புலிகளுக்கு உதவி செய்வதாகவும் ஆர்ப்பாட்டக்காரர்கள் குற்றம் சாட்டியதுடன் உடனடியாக நாட்டை விட்டு வெளியேற வேண்டும் என்றும் வலியுறுத்தினர்.

சுமார் ஒரு மணித்தியாலமாக நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தினால் பௌத்தாலோக மாவத்தையில் இருந்து கனத்தை சந்தி வரை போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது. பொலிஸாரும் சிறப்பு அதிரடிப்படையினரும் காவல் கடமையில் ஈடுபட்டிருந்தனர். (ச-5)

## வன்னியில் அகோர ஷெல்...

250க்கும் அதிகமான எறிகணைகளை வீசித் தாக்கியுள்ளதாக இணையத்தளங்கள் தெரிவித்தன.

இதன்போது 18 பொதுமக்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளதுடன் 55 பேர் காயமடைந்துள்ளனர்.

இதேவேளை முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள சுதந்திரபுரம் பகுதியில் இடம்பெயர்ந்து சென்று கொண்டிருந்த பொதுமக்கள் மீது நேற்று அதிகாலை மேற்கொள்ளப்பட்ட எறிகணைத் தாக்குதலில் 4 பேர் கொல்லப்பட்டுள்ளதுடன் 32 பேர் காயமடைந்துள்ளனர்.

தொடர்ச்சியான எறிகணைத் தாக்குதல்களினால் காயமடைகின்ற மக்கள், மருத்துவமனைகளும் போதிய மருத்துவ சிகிச்சைகளும் இல்லாத நிலையில் உயிரிழக்கும் அவலம் ஏற்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை வன்னி எங்கும் நேற்று முன்தினம் வான் மற்றும் தரைப்படையினர் நடத்திய தாக்குதல்களில் 36 பொதுமக்கள் கொல்லப்பட்டுள்ளதுடன் 76 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

இதேவேளை உறவினர்கள் யாருமற்ற நிலையில் இருந்த பல உடலங்களை தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினர் அடக்கம் செய்துள்ளனர் என புதினம் இணையத்தளம் தெரிவித்தது.

முல்லைத்தீவு தேவிபுரம், வள்ளிபுனம், சுதந்திரபுரம், மாத்தளன் உள்ளிட்ட பகுதிகளில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை காலை முதல் படையினர் பரவலாக எறிகணைத் தாக்குதலை நடத்தியுள்ளனர்.

இத்தாக்குதலின்போது 6 பேர் படுகொலை செய்யப்பட்டுள்ளதுடன் 12 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

கி.மனோன்மணி (வயது 60), ந.ஜெயசாந்தி (வயது 38), மு.அங்கமுத்து (வயது 58) ஆகியோர் கொல்லப்பட்டவர்களில் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

ஒரு வயதுக் குழந்தையான சுசீலா, யோ.கவிந்தவி (வயது 9), யோ.விதுஸ்ணவி (வயது 13), ந.டயோலா (வயது 15), த.யோகா (வயது 19), கி.இராசமணி (வயது 65), இ.இராஜேஸ்வரி (வயது 39), பொ.கிருஸ்ணமூர்த்தி (வயது 32), மா.சாந்தகுமார் (வயது 25), விஜயலட்சுமி (வயது 46), க.மல்லிகாதேவி (வயது 48), இராஜசிறீ (வயது 28) ஆகியோர் படுகாயமடைந்துள்ளனர்.

மாத்தளன் பகுதி மீது நேற்று முன்தினம் பிற்பகல் மேற்கொள்ளப்பட்ட கடுமையான பீரங்கித் தாக்குதலில் 16 பேர் கொல்லப்பட்டுள்ளதுடன் 49 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

இடம்பெயர்ந்த தமிழர்கள் தங்கியிருந்த கொட்டகைகளின் மீதே எறிகணைகள் வீழ்ந்து வெடித்துள்ளன.

இத்தாக்குதலின்போது ஒரு கொட்டகைக்குள் மட்டும் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த [illegible] பேர் படுகொலை செய்யப்பட்டுள்ளனர்.

நிவாதேயினி (வயது 10), த.தமிழன்பன் (வயது 5), த.செல்வானந்த் (வயது 12), செ.தனஞ்சியன் (வயது 47), த.நகுலேஸ்வரி (வயது 42), செ.தயாபரன் (வயது 37), த.சுமதி ஆகியோர் படுகாயமடைந்துள்ளனர்.

இதேவேளை வான்படை நடத்திய குண்டுத் தாக்குதலில் 3 பேர் கொல்லப்பட்டுள்ளதுடன் 16 பேர் படுகாயமடைந்துள்ளனர். இடம்பெயர்ந்த மக்கள் வாழும் கொட்டகைகளை இலக்கு வைத்தே குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டது.

காயமடைந்தோரில் சடையன் வரதராசா (வயது 23), கணேசன் சுதாகரன் (வயது 25), இராமன் இராசன் (வயது 32), தயாபரன் பாலசுமதி (வயது 35), சிவநேசன் (வயது 36) ஆகியோரினது விபரங்கள் கிடைத்துள்ளன.

## வன்னியில் தவித்த...

மோதலில் ஈடுபடுகின்ற இரு தரப்பினரின் இணக்கத்துடனேயே இந்தக் கப்பல் மூலமான பாதுகாப்பான வெளியேற்றத்துக்கு ஏற்பாடு செய்யப்பட்டதாக சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் கொழும்புக்கான பேச்சாளர் சரசி விஜேரட்ண பி.பி.சியிடம் தெரிவித்துள்ளார்.

இந்தக் கப்பல் முல்லைத்தீவில் இருந்து புறப்பட்டுவிட்டதை உறுதி செய்த கிளிநொச்சி சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் ரி. சத்தியமூர்த்தி, இவ்வாறு மேலதிக சிகிச்சைக்காக அனுப்பப்பட வேண்டியவர்கள் இன்னும் ஆயிரத்துக்கும் அதிகமானோர் அங்கிருப்பதாகவும் குறிப்பிடுகின்றார்.

இந்தக் கப்பல் வந்து சென்ற வேளை அந்தப் பகுதியில் மோதல்கள் சற்று தணிந்திருந்ததாக தென்பட்டதாகவும் அவர் கூறினார்.

புதுமாத்தளன் கடற்கரையிலிருந்து கப்பல் வரையிலான கடற்பகுதியில் நோயாளர்களை மிகுந்த கவனத்துடன் அழைத்துச் செல்வதற்கு உள்ளூர் மீனவர்கள் தமது படகுகளை வழங்கி பெரிதும் ஒத்துழைத்ததாகவும் சர்வதேச செஞ்சிலுவைக்குழு தெரிவித்திருக்கின்றது.

நோயாளர்கள் அழைத்துச் செல்லப்பட்ட இந்தக் கப்பலில் மருத்துவர்கள், செஞ்சிலுவைக்குழு உறுப்பினர்கள் உட்பட பலரும் பிரயாணம் மேற்கொண்டதாகவும் சர்வதேச செஞ்சிலுவைக்குழு கூறியிருக்கின்றது.

இந்த நோயாளர்களை கொண்டு செல்வதற்கு காங்கேசன்துறை- திருகோணமலைக்கிடையில் பயணிகள் சேவையில் ஈடுபடும் கிறீன் ஓசியானிக் கப்பல் பயன்படுத்தப்பட்டதாகக் கூறப்படுகிறது. (ச-5)

CIMA MCS Supported By UNDP/JRRP
CIMA அணியினர் யாழ் நகரில்.
CIMA கற்கைநெறி தொடர்பான கலந்துரையாடல்
இடம்: நாவலர் கலாச்சார மண்டபம்
காலம்: 11 பெப்ரவரி 2009 மாலை 2 மணி
ஆர்வமுள்ள அனைவரும் பங்குபற்றலாம்
(C-2123)

திருமண நல்வாழ்த்துக்கள்
நிகழும் மங்களகரமான சர்வதாரி வருடம் தைத்திங்கள் 29ஆம் நாள் (11.02.2009) இன்று புதன்கிழமை முற்பகல் 10.07 மணிமுதல் 11.57 மணி வரையுள்ள சுப முகூர்த்த வேளையில் திருமண பந்தத்தில் இணையும்
மணமகன் கண்ணதாசன்
மணமகள் அனுஷா
மணமக்களை காரை. திக்கரை முருகன் அருள் பெற்று பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்.
கலைவாணி நகை மாளிகை, யாழ்ப்பாணம்.
வாழ்த்துவோர்:- சோ.நாகராசா குடும்பம்

Maths Centre M.M.V. Road, Nelliady
A/L - 2011
அரசியல் விஞ்ஞானம் (Po-Sc) - திருச்செந்தூரன்
ஆரம்பம்- 11.02.2009 புதன் P.M.-3.30
2010க்கு Po-Sc நடைபெறுகின்றது.
(C-2122)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3, 2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 11.02.2009 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.